பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்


சுடர் : 40
கதிர் : 340

ஞாயிற்றுக்கிழமை
02 நவம்பர் 2025

ஐப்பசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மீனவர்களைப் பாதுகாக்கக்கோரி முல்லைத்தீவில் மீனவ மாநாடு!

விரிவு பக்கம்:- 03





## அரச மாளிகையில் இருந்து வெளியேறுகிறார் சந்திரிகா

கொழும்பு, நவ. 2
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அரச மாளிகையில் இருந்து விரைவில் வெளியேறவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

# செம்மணிப் புதைகுழிக்கு நீதியை விரைவுபடுத்துக!

### யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுப் போராட்டம்
### பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவம்பர் 2

**செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், ஏனைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.** 15

உயர்தரப் பரீட்சை

## நாளைமறுதினம் முதல் வகுப்புகளுக்குத் தடை

கொழும்பு, நவ. 2
2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் தடை 15

## சட்டவிரோத மணல் கடத்தல் வரணியில் நேற்று முறியடிப்பு

### வாகனத்தைக் கைவிட்டு சந்தேகநபர்கள் ஓட்டம்



யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் நேற்று சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.
வடமராட்சி குடத்தனைப் பகுதியில் இலக்கத்தகடு இல்லாத நிலையில், பட்டா ரக வாகனமொன்றில் மணலை ஏற்றிக் கொண்டு பயணித்த நபர்களை, வரணியில் பொலிஸார் இடைமறித்துள்ளனர். இதன்போது, 15



## கஞ்சா வலையமைப்பொன்று சிக்கியது பருத்தித்துறையில்

### 100 கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சா மீட்பு
### பெண்ணொருவர் உட்பட நால்வர் கைது

யாழ்ப்பாணம், நவ. 2
பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்பகுதியில் இடம்பெற்ற கஞ்சா கடத்தல் நேற்று முறியடிக்கப்பட்டதுடன், அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் 15

## 2028ஆம் ஆண்டுக்குப் பின் அரிசி இறக்குமதி இல்லை

### அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2
2028ஆம் ஆண்டுக்குப் பின்னர், அரிசியை இறக்குமதி செய்வதில்லை என்ற நோக்கத்துடன் அரசாங்கம் 15



## டிப்பர் - கார் விபத்து; மூவருக்குப் படுகாயம்

இயக்கச்சியில் கோரம்

விரிவு பக்கம்:- 15

## இலங்கைக்குள் போதைப்பொருள்; பின்னணியில் பாகிஸ்தானியர்கள்!

### அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



கொழும்பு, நவ. 2
இலங்கைக்குள் போதைப்பொருள்களைக் கடத்தும் பிரதான நபர்களாக பாகிஸ்தானியர்களே காணப்படுகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு 15

### முச்சந்தி முரளி

'எல்லா இடத்திலையும் வளைச்சு வளைச்சுப் பிடிச்சும் இன்னும் முற்றுப்புள்ளி வைக்கேலாமல் இருக்கே'

# சஞ்சீவி

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4242
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 03 10 20 79
விசேட எழுத்து G

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1309
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 05 21 29 57

**NLB ஜய**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0268
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 7 0 2 8

**மெகா பவர்**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2348
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 08 41 65 68

**மஹஜன சம்பத**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6000
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 6 9 4 5 1

**தன நிதானய**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2030
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 20 25 28 55
விசேட எழுத்து P

**சுப தவசக்**
திகதி 01.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0116
வெற்றி இலக்கினம் தனுசம்
வெற்றி இலக்கங்கள் 01 08 49

# மாகாணசபைத் தேர்தல் உறுதியாகக்கூறமுடியாது

உள்ளூராட்சி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2

**மாகாணசபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. தேர்தல் முறைமை குறித்து தீர்மானம் எட்டப்பட்ட பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக்கை இடம்பெறும் என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மாகாணசபைத் தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதற்காக பழைய முறைமை கடந்தகாலத்தில் இரத்து செய்யப்பட்டது. எனினும், இதற்குரிய நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. சட்ட மூலத்தைக் கொண்டுவந்த அமைச்சர்கூட அதற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

எனவே, மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையின்கீழ் நடத்துவது என்பது பற்றி முதலில் தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடன் சிறந்த முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் தேர்தல் நடத்தப்படும்.

ஜனநாயகத்தை வெளிப்படுத்துவதற்காக மக்களுக்கு உள்ள உரிமையை நாம் தடுக்கமாட்டோம். எனினும், கடந்தகாலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தான் பிரச்சினையாக உள்ளது. அது நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் நடவடிக்கை இடம்பெறும். தேர்தல் திகதி பற்றி தற்போது உறுதியாகக் கூறமுடியாது. தேர்தல் முறைமை பற்றி இறுதி முடிவை எட்டப்பட்ட பின்னர் அது நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0708
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 3 4 8 6 6 9

**Super Ball**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2974
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 04 17 34 43

**சனிதா**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 26 71 72 78
வெற்றி வாரம் 5135

**SASIRI**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0804
வெற்றி இலக்கம் 18 32 37

**லக்ன ராசி**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம் 23 24 25 48
சீட்டிழுப்பு வாரம் 4686

**KAPRUKA**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கம் 16 28 58 67
வெற்றி வாரம் 2150

**அத கோடிபதி**
திகதி 01.11.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 31 32 59 60
வெற்றி வாரம் 2800

## சஜித் – ரணில் இணைந்தால் முதல்வர் வேட்பாளராவேன்!

மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு. நவ.2

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே சின்னத்தின்கீழ் போட்டியிட முன்வந்தால் மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தீர்மானம் எடுக்கவில்லை.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒரே மேடைக்கு வந்து, ஒரே சின்னத்தின்கீழ் போட்டியிடவேண்டும். இந்தத் தேர்தலில் களமிறங்குமாறு கட்சி கோரிக்கை விடுத்தால் தேர்தலில் போட்டியிட நான் தயார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு, முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவேன். கட்சி கோரிக்கை விடுக்காவிட்டால் போட்டியிடமாட்டேன். அதேபோல இருதரப்பும் இணையாவிட்டாலும் களமிறங்கமாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## ஷொப்பிங் பைகளுக்கு இனிக் கட்டணம்!

கொழும்பு.நவ.2

கைப்பிடிகளுடன் கூடிய பொலித்தீன் பைகளுக்கு, வர்த்தக நிலையங்கள் கட்டணம் அறவிடவேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இனிவரும் காலங்களில் பொருள்களை விற்பனை செய்யும் போது, ஷொப்பிங் பைகள் போன்ற கைப்பிடி கொண்ட பொலித்தீன் பைகளுக்கு ஒரு விலையை அறவிடவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம் சகலரது ஒத்துழைப்பும் அவசியம்!

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

கொழும்பு.நவ.2

நாட்டில் போதைப்பொருளை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் தேசிய வேலைத்திட்டம் பாராட்டுக்குரியது. இந்தத் திட்டம் வெற்றியளிக்கவேண்டுமெனில் நாட்டின் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் அரசாங்கத்தால் கடந்த வியாழக்கிழமை தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொலிஸ் சேவையில் உள்ள ஊழல் மலிந்த அதிகாரிகள் மற்றும் உயர்மட்ட அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு மற்றும் தலையீட்டின் காரணமாக, போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதை நாம் பல வருடங்களாக அவதானித்து வருகின்றோம்.

அதன் விளைவாக பாடசாலைகளுக்கு உள்ளேயும், நாடளாவிய ரீதியிலும் போதைப்பொருள் பாவனை வியாபித்து. போதைப்பொருள் வர்த்தகத்தின் மத்திய நிலையமாக இலங்கை மாறியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் – என்றுள்ளது. (க-இ)

## எதிரணிகளின் இணைவு வரவேற்கத்தக்க விடயம்

அமைச்சர் சுனில் தெரிவிப்பு

கொழும்பு.நவ.2

எதிரணிகள் ஒன்றுபடவேண்டும். அது நல்லது. அதனை நாம் வரவேற்கின்றோம் என்று அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக எதிரணிகளால் எதிர்வரும் 21 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள பேரணி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் கூட்டமொன்றை நடத்துவதாக இருந்தால் ஒரு கிழமைக்கு முன்புதான் தயார்படுத்தல் இடம்பெறும். ஆனால் இவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே தயாராகிவிட்டனர். மக்களைத் திரட்டுவதற்கு இவர்களுக்கு ஒரு மாதம் செல்லும் என்பது இதன்மூலம் புலப்படுகின்றது – என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு விவசாய அபிவிருத்திக்கு நவீன முறைமைகளை பகிருங்கள்

### இந்தோனேசியத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.2

விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னணியிலுள்ள இந்தோனேசியா தனது அனுபவங்களை வடக்கு மாகாணத்துடன் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவரிடம் வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர், பிரதித்தூதுவர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கையில் வளமுள்ள மாகாணம் வடக்கு மாகாணம் எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர்வறுமையிலும்முன்னணியில் இருக்கின்றமை வேதனையானது எனக் குறிப்பிட்டார்.

விவசாயம், மீன்பிடி இரண்டுக்கும் மிகப்பெரிய வாய்ப்புகள் உள்ளபோதும் பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களாக அவற்றை மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் இல்லாமை பெரும் பின்னடைவாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

விவசாயத்தில் குறிப்பாக நெற்பயிர்ச்செய்கையில் இந்தோனேசியா முன்னணியில் உள்ளது. எனவே குறுகியகாலத்தில் நெல் உற்பத்தி, நவீன முறைமை உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் பகிரப்படவேண்டுமெனவும் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தோனேசியாவின் விவசாய முறைமை உள்ளிட்ட விடயங்களைப் பகிர்ந்துகொண்ட தூதுவர், குறிப்பாக கலப்பு உரப் பாவனையையும் அதன் வெற்றியையும் சுட்டிக்காட்டினார். விவசாய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்குத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார். (ச-66)

### உலக வங்கி நிதியுதவியில்

# காலபோக விவசாயச் செய்கைக்கு புதுக்குடியிருப்பில் அணைக்கட்டுகள்



முல்லைத்தீவு,நவ.2

உலக வங்கியின் சுமார் 260 மில்லியன் ரூபா நிதியில் இருபோகங்கள் விவசாயச் செய்கையை மேற்கொள்ளக்கூடியவாறு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கமநலசேவைத்திணைக்களத்தின்கீழ் உள்ள பகுதிகளில் ஆறு இடங்களில் அணைக்கட்டுகள் கட்டப்பட்டுவருகின்றன.

இதில் உலக வங்கியின் 41மில்லியன் ரூபா நிதியுதவியில் புதுக்குடியிருப்பு கமநல சேவைத் திணைக்கள மல்லிகைத்தீவுக் கிராமத்தில் பேராற்றை மறித்து கட்டப்பட்ட குன்றுப்பள்ளாறு என்ற அணைக்கட்டுத் திறப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான உலக வங்கியின் பிரதிநிதி மருத்துவர் சேகு பங்கேற்றார். ஆண்டுதோறும் பேராறு எனப்படும் ஆறு ஊடாக அதிகளவான மழைநீர் மற்றும் கழிவு நீர் கடலைச் சென்றடைந்து வருகின்றது. இவ்வாறு நீரை வீண்விரயம் செய்யாது அதனை விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தி விவசாய வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதற்கு உதவுமாறு விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்த அணைக்கட்டுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இந்த அணைக்கட்டுகளூடாக சிறுபோக விவசாயச் செய்கை சுமார் 1800 ஏக்கர் வரை மேற்கொள்ளமுடியும் என்றும் அதில் 2 ஆயிரம் விவசாயிகள் நன்மை அடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)



## அரசின் பலவீனமான கொள்கைகளால் பாதாளக்குழுக்களிடம் அதிகாரம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

கொழும்பு,நவ.2

நாட்டுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தை வலுப்படுத்தவே அரசாங்கத்துக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கினர். ஆனால் அரசாங்கத்தின் பலவீனமான கொள்கைகளால், பாதாள உலகக் குழுக்களிடம் அதிகாரம் பறிபோயுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாவனெல்லை நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சமூகத்தில் திட்டமிட்ட குற்றச்செயல்கள் கோலோச்சி, பாதாள உலகக்குழுக்களும், கொலையாளிகளும் சமூகத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

இவற்றைத் தடுக்கமுடியாத அரசாங்கமே இன்று ஆட்சியில் இருக்கின்றது. அரசாங்கம் வீரவசனங்கள் பேசினாலும், ஊடகப் பரப்புரைகளை முன்னெடுத்தாலும் மக்கள் அவநம்பிக்கையுடனேயே வீடுகளிலிருந்து வெளியேறுகின்றனர்.

வெலிகம பிரதேசசபையின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியமையே வெலிகம பிரதேசசபைத் தவிசாளர் கொல்லப்பட்டமை, அப்பிரதேசசபையின் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இருவர் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்களின் பின்னணியாகும். அரசாங்கத்தின் பலவீனமான கொள்கைகளே இதற்குப் பிரதான காரணமாகும் - என்றார். (சு-இ)

## மீனவர்களைப் பாதுகாக்கக்கோரி முல்லைத்தீவில் மீனவ மாநாடு!

முல்லைத்தீவு, நவ.2

மீனவப் பிரச்சினைகளின் தீர்வை முன்னோக்கிய மீனவ மாநாடும் பாரம்பரிய கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதுடன், கடல்வளத்தினையும் பாதுகாக்குமாறும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டப் பேரணி வடமாகாண மீனவ மக்களால் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நகரில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மாநாட்டில் கடற்றொழிலாளர்களின் நலன்சார்ந்தும், கடல் வளத்தைப் பாதுகாப்பது சார்ந்தும் 'முல்லைப் பிரகடனம்' என்ற பெயரிலான பிரகடனம் ஒன்று முன்மொழியப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் மாநாட்டில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ச-246)







யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தெரிவுசெய்யப்பட்ட, பொருளாதாரத்தால் நலிவுற்ற 135 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் அத்தியாவசிய உணவுப்பொருளான அரிசிப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக நிலையமொன்றில் பொருள்கள், பணம் திருட்டு

யாழ்ப்பாணம்,நவ.2
வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றை உடைத்து, அங்கிருந்த பொருள்கள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

நெல்லியடி திருமகள்சோதி வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டுச் சென்ற வர்த்தகர் மறுநாள் புதன்கிழமை திறந்தபோதே கூரை பிரித்து, அங்கிருந்த பொருள்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் திருடப்பட்டதை அறிந்தார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-100)

# கார்த்திகை மாதத்தில் மரநடுகை தமிழ்த்தேசியத்தைக் குளிர்விக்கும்

## பசுமை இயக்கத்தின் தலைவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.2**

**கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல; அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச் செயற்பாடுமாகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வரை வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,
பூமி விரைந்து சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதிவேகத்துடன் நீண்டநேரம் நின்று தாக்கும் சூறாவளிகள், காலம் தப்பிக் கொட்டித்தீர்க்கும் அடைமழை, காடுகளில் தீ மூட்டும் கடும் வறட்சி, உயர்ந்து செல்லும் கடல்மட்டம், உயிரினங்களின் பேரழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டிய கட்டாயநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்குக் கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப்பொருத்தமான மாதமாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது ஆதி வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்து, அவற்றை உயிருள்ள நினைவுச்சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர். அந்த வகையில், கார்த்திகை மாத மரநடுகை என்பது தமிழ்த்தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும். எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன்கூடிய ஒரு தமிழ்த்தேசியச் செயற்பாடாகவும் கொண்டாடவேண்டியது அவசியமாகும் - என்றார். (ச-27)

## கனடா உயர்ஸ்தானிகருடன் யாழ்.மாவட்டச் செயலர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.2
கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனை யாழ்.மாவட்டச் செயலக அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகே, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரி நாயக்க ஆகியோர் உடனிருந்தனர். (ச-41-66)



## வடக்கு விவசாயத் திணைக்களத்துக்கு உலக வங்கியால் உழவு இயந்திரங்கள்

கிளிநொச்சி, நவ. 2
உலக வங்கியின் நிதியுதவியில் வடமாகாண விவசாயத்திணைக்களம் மற்றும் பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்துக்கு 24 மில்லியன் ரூபா பெறுமதியான உழவியந்திரங்கள் மற்றும் வயல் மட்டப்படுத்தும் இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. கிளிநொச்சியிலுள்ள காலநிலைக்குச் சீரமைவான விவசாயத்திட்டத்தின் பிரதித்திட்டமிடல் அலுவலகத்தின் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி. பாபு தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



நிகழ்வில் காலநிலைக்குச் சீரமைவான விவசாயத்திட்டத்தின் உலக வங்கியின் பணிக்குழுத் தலைவர் கலாநிதி ஷேயு சலாவ், வடமாகாண விவசாயப்பணிப்பாளர் சுகந்தினி செந்தில் குமரன், திட்டப்பணிப்பாளர் சமன் பந்துலசேன ஆகியோர் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கிவைத்தனர். (ச-25, 113)

## வீதியில் மருத்துவக்கழிவு வீசல்; விசாரணைகள் முன்னெடுப்பு!

யாழ்ப்பாணம்,நவ.2
யாழ்ப்பாணம் பி.எ.தம்பி வீதியில், தனியார் மருத்துவமனையொன்றால் மருத்துவக்கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன.

அங்கு வீசப்பட்டிருந்த கழிவுகளுடன் இருந்த பற்றுச்சீட்டுகளின் அடிப்படையில் பொதுமக்கள் மாநகரசபையினருக்கு இந்தத் தகலைத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து மாநகரசபை உறுப்பினர்களான மதுசிகான், சதீஸ் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று, அங்கு மருத்துவக்கழிவுகள் கொட்டப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தி சுகாதாரப் பரிசோதகருக்கும், யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

குறித்த பகுதிக்கு வருகைதந்த பொலிஸார் கழிவுகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் கழிவுகளைக் கொட்டிய தனியார் மருத்துவமனை நிர்வாகத்தினரை விசாரணைக்கு வருமாறும் அழைப்பு விடுத்தனர். (க-27)




## வீதிக்குப் புதிய பெயர்ப்பலகை

யாழ்ப்பாணம்,நவ.2
வலிகாமம் வடக்கு மல்லாகம் பங்களா வீதிக்குப் புதிய பெயர்ப்பலகை நேற்றுமுன்தினம் பொருத்தப்பட்டது.

நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் சி.சிவானந்தன் ஆகியோருடன் நன்கொடையாளர்களும் கலந்துகொண்டனர்.

அதேவேளை அவ்விடத்தில் வைப்பதற்காக புதிய குப்பைக்கூடைகள், மல்லாகத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றால் நன்கொடையாக வழங்கப்பட்டன. (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாப்ஸ் எரிவாயு விலையில் மாற்றமில்லை

கொழும்பு,நவ. 2 நவம்பர் மாதத்துக்கான லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லாப்ஸ் எரிவாயுவின் பணிப்பாளர் நிரோஷன் ஜே. பீரிஸ் அறிவித்துள்ளார்.

இதன்படி, லாப்ஸ் எரிவாயுவின் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை நவம்பர் மாதம் முழுவதும் தற்போதைய விலையிலேயே நீடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




துபாய்
சுப்பர் மார்கெட்
வேலைவாய்ப்பு

| No | Job Category | Qly | Salary DHS |
|---|---|---|---|
| 01. | ட்ராலி பாய்ஸ் | 30 | 1000 |
| 02. | காசாளர் - பெண்கள் | 30 | 1100 |
| 03. | விமான துப்புரவு பணியாளர்கள் | 50 | 1000 |

- அனுபவம் தேவையில்லை
- பயிற்சி வழங்கப்படும்.
- ஆங்கிலம் பேச தெரிந்திருத்தல் அவசியம்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- உணவு மற்றும் தங்குமிடம் நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- மருத்துவ வசதிகள் நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- நாளொன்றுக்கு 8.00 மணி நேர வேலைப்படி வாரத்தில் 6 நாட்கள்
- ஒரு கிழமைக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கப்படும்.
- 3 மாத தகுதிக்கான காலத்துடன் 2 வருட வேலை ஒப்பந்த காலம்.
- இரண்டு வருடம் பூர்த்தியானதும் விமான பயணச்சீட்டு நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- U.A.E நாட்டின் வேலைவாய்ப்பு தொடர்பான ஏனைய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப.

RODNEY
FOREIGN EMPLOYMENT AGENCY (PVT) LTD.
SLBFE-NO 2427
இல.160/2, விஹார மாவத்தை, பெல்லன்வில, பொரலஸ்கமுவ
www.rodneyrecruitment.com | E-mail - rodneyagency@hotmail.com
தொடர்புகளுக்கு - 077 307 4744 / 075 865 7466
ஹொட்லைன் 0778836697



இந்தியாவின் நம்பர் 1
வயது வந்தவர்களுக்கான
டயப்பர்

FRIENDS®
ADULT DIAPERS

இப்பொழுது
யாழ் மண்ணில்

- பக்டீரியா எதிர்ப்பு
- வேகமாக அகத்துறிஞ்சல்
- இலங்கையரின் உடலமைப்பு
- ஈரத்தன்மை காட்டி
- 8 மணிநேர பாதுகாப்பு

விலைக்கேற்ற தரம்



www.dbhealthcare.lk
S,M,L & XL
60x90cm
Darley Butler & Co. Ltd.



தேவை
தெஹியோவிட்டவில் உள்ள எஸ்டேடிற்கு வேலையாட்கள் தேவை. இருவரும் வேலை செய்யக் கூடிய தம்பதியினர் விரும்பத்தக்கது. தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்பு
077 6393836



SINCE 1960
LANWA
STEEL
CEYLON STEEL CORPORATION

சிறந்த பிணைப்பின் கீழ் எப்போதும்
65 வருட லங்வா சங்ஸ்தா நம்பிக்கையுடன்



071 146 9999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். காரமான உணவுகளைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன்-மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படக்கூடும் .

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** இன்று எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டியிருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.



# கேரளக்கஞ்சாவைக் கடத்திய இருவர் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், நவ.2

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பகுதியில் வைத்து 185 கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு டிங்கிப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது. கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் பெறுமதி 41 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. 25 மற்றும் 30 வயதுடைய யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதாகினர். சந்தேகநபர்கள் சான்றுப்பொருள்களுடன் நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ச-27)

## வணிகர் மன்ற பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

மன்றத்துக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் மன்றத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் இ. சுரேஸ் அறிவித்துள்ளார். (ச-25, 9)



## கோப்பாய் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம். நவ.2

வலிகள் சுமந்த கார்த்திகை மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் மாவீரர் தினத்தையொட்டி சிரமதானப் பணிகள் யாழ்.கோப்பாயில் மாவீரர் துயிலுமில்லத்துக்கு அருகில் அமைந்துள்ள தனியார் காணியில் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு அருகில் அமைந்துள்ள தனியார் காணியில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் கடந்த பல வருடங்களாக எழுச்சிபூர்வமாக நடத்தப்பட்டுவருகிறன. இந்தநிலையில் கார்த்திகை மாதத்தின் ஆரம்ப நாளான நேற்று சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சிரமதானப் பணிகளில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன். மாஸ்ரர், கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். எதிர்வரும் நாள்களிலும் சிரமதானப்பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## கதிர்காம ஆலயம் நோக்கி வேல்தாங்கிய யாத்திரை

யாழ்ப்பாணம், நவ. 2

கார்த்திகை விரதத்தை முன்னிட்டு இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில், வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய வேல்தாங்கிய புனித திருத்தலத் தரிசன யாத்திரை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. சிவத்திரு.ஞான தவசுத சிவாச்சாரியார் கலந்துகொண்டு ஆசிகள் வழங்கித் தரிசன யாத்திரையை ஆரம்பித்துவைத்தார். குறித்த தரிசன யாத்திரை வழிகள்தோறும் பல்வேறு ஆலயங்களைத் தரிசித்தவாறு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கதிர்காமக்கந்தன் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (ச-25,66)





## பேருந்துக் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, நவ.2

எரிபொருள் விலையில் மாற்றங்கள் ஏற்பட்டதையடுத்து பேருந்துக் கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அகில இலங்கை தனியார் பேருந்துச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். தற்போது, நடைமுறையில் உள்ளபடியே பேருந்துக் கட்டணங்கள் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# அழகல்ல பேராபத்து...!

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குச் செல்லமுற்பட்ட இருவர், பெலாரஸ் எல்லையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். சட்டவிரோத குடியேறிகளுக்கு ஐரோப்பிய எல்லைகள் நாளுக்கு நாள் பாதுகாப்பற்றதாக மாறி வருகின்றன. மிக நீண்டகாலமாகவே, ஐரோப்பாவின் ஆபத்தான எல்லைகளில் இலங்கையர்கள் உயிரிழப்பதும் - சித்திரவதைக்கு உள்ளாவதும் - காணாமற்போவதும் -கடத்திவைக்கப்படுவதும் - பணயக்கைதிகளாவதும் தொடர்ந்துவரும் நிலையில், தற்போது மேலும் இருவர் கொல்லப்பட்ட விடயம் அதன் துயரங்களின் தொடர்கதையாகவே அமைந்திருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகப் பயணம் மேற்கொள்வோரின் முதற்கட்டத் தெரிவாக பெலாரஸ் எல்லையே காணப்படுகின்றது. அதைவிட, ஆட்கடத்தல்காரர்களின் பிரதான தெரிவாகவும் அதுவே அமைந்திருக்கின்றது. இத்தனைக்கும், இன்றைய திகதியில் உலகில் எல்லைப் பாதுகாப்புக் கெடுபிடி அதிகமுள்ள நாடுகளில் ஒன்றாக பெலாரஸ் உள்ளது.ரஷ்யாவின் மிக நெருக்கமான நட்பு நடான பெராலஸ், ரஷ்யாவின் அணுவாயுதத் திட்டங்களில் முக்கியமான பங்காளியாகவும் காணப்படுகின்றது. ரஷ்யாவின் அனைத்து ஆயுதத் திட்டங்களுக்கும் துணையாக நிற்கின்றமையால், பெலாரஸின் தேசியப் பாதுகாப்பும் இன்று பெரும் அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக எல்லை வழியாக ஊடுருவும் நபர்கள், பெலாரஸை பல வழிகளிலும் இலக்குவைக்கின்றமையால், 'சர்ச்சைக்குரிய நடமாட்டங்களைக் கண்டதும் சுடுவதற்கு' அங்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது. எனவே, ஐரோப்பிய நாடுகள்மீது தீராதமோகம் கொண்டு அங்கு எப்படியாவது சென்றுவிடவேண் டும் என்று எண்ணுபவர்கள், இந்தப் பயணத்தில் இருக்கக்கூடிய ஆபத்தான விடயங்களை நன்கு உய்த்துணர வேண்டும்.

இத்தனை தடைகளையும் தாண்டி ' உயிராபத்தான பயணம் மேற்கொண்டு' ஐரோப்பியாவைச் சென்றடைந்தால், அங்கே எவரும் எவரையும் தங்கத்தட்டில் வைத்துப் பராமரிக்கப் போவதில்லை. அனைத்து நாடுகளும் இன்று அகதிகளைக் கண்டாலே அருவருக்கத் தொடங்கியிருக்கின்றன. இதில் விதிவிலக்கு என்று எதுவுமில்லை. கனடா அகதிகளுக்கு முற்றாகக் கதவடைத்துள்ளது. பிரிட்டன், அவுஸ்திரேலியாவில் இன்னும் பல கெடுபிடிகள். அமெரிக்காவின் நடவடிக்கையோ அனைத்துக்கும் அப்பால். இத்தனையையும் தாண்டி புலம்பெயர் தேசங்களில் இடம் கிடைத்தாலும், அங்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பது குதிரைக்கொம்பு நிலைதான். ஆக, உலக நாடுகளின் போக்கும் - கொள்கையும் மாறியிருக்கையில், உயிரைப் பணயம்வைத்து மேற்கொள்ளும் சட்டவிரோதப் பயணங்கள் அவசியம்தானா? இலங்கையில் இல்லாத வளங்கள் இல்லை. அத்தனை வளங்கள் இருந்தும், இந்த நாடு இன்னும் கடந்த தலைமுறைக்கான வளர்ச்சியுடன் மட்டுப்பட்டிருப்பதற்கு, உழைக்கும் வர்க்கத்தினரான இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறியமையும் பிரதான காரணம். எந்தவொரு நாட்டில் உழைக்கும் வர்க்கத்தினர் இல்லாமல் போகின்றனரோ, அந்த நாடு பொருளாதாரத்தில் இறக்கும்நிலையை அடையும். எல்லாவற்றையும்விட, வெளிநாட்டு வேலைகளும், வெளிநாட்டு வாழ்க்கையும்தான் வேண்டுமென்றால், அதற்குச் சட்டபூர்வமான பயணங்களை மேற்கொள்ளுங்கள். பணயம் வைக்கும் அளவுக்கு உங்கள் உயிர் அத்தனை மலிவானது அல்ல.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."

– வாரன் ப வெற்–




## இலங்கைக்கு வலுவூட்டுவதற்கு
# ௯0 மில்லியன் டொலர் ஆசிய வங்கியிடம் கடன்



**கொழும்பு,நவ. 2**
**பின்தங்கிய சமூகங்களுக்கும் முக்கியமான சமூக, பொருளாதார நிலையங்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 90 மில்லியன் டொலர் கடன் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் நிதியமைச்சு கைச்சாத்திட்டுள்ளது.**

பின்தங்கிய பிரதேசங்களுக்கான சுமார் 500 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி, காலநிலைச் சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்கு ஏற்றவாறானதும் பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கு நேயமான வசதிகளை மேம்படுத்தல் என்பவற்றுக்குமாக இந்தக் கடன் நிதி பயன்படுத்தப்படும். அத்தோடு இந்த நிதி தேசியரீதியில் சுமார் 21கிலோமீற்றர் நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சுமார் 100 கிலோமீற்றர் வீதிகளின் பராமரிப்பு என்பவற்றுக்கும் உதவும் என நிதியமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. கடன் உதவிக்கான ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் இலங்கைக்கான அதன் பணிப்பாளர் டக்காபுமி கடானோவும் கைச்சாத்திட்டுள்ளனர். (ச-இ)

## ஓட்டோக் கட்டணம் திருத்தமில்லை!

கொழும்பு,நவ. 2
நாட்டில் எரிபொருள் விலைத்திருத்தம் செய்யப்பட்டிருந்தாலும், முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்களில் எந்தத் திருத்தமும் மேற்கொள்ளப்படாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
முறையான ஒழுங்குமுறை இல்லாத காரணத்தினால் குறித்த திருத்தம் மேற்கொள்ளப்படாது என அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். (ச-இ)



## ரூபா வீழ்ச்சி

கொழும்பு,நவ. 2
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 3.9 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் வரையிலான பத்து மாதங்களில் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
கடந்த பத்து மாதங்களில் ஏனைய வெளிநாட்டுநாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் மதிப்பு கணிசமாகக் குறைந்துள்ளதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## கல்லால் தாக்கி பெண் கொலை

கொழும்பு,நவ. 2
காலி, அஹுங்கல்ல பொலிஸ் பிரிவின் பாத்தேகமப் பகுதியில் பெண் ஒருவர் கல்லால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
உயிரிழந்தவர் பாத்தேகமப் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்ய ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# சுற்றுலாவிகள் வருகை கடந்த மாதம் 153,063

கொழும்பு,நவ.1
கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 53,063 என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 44,741 சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர். மேலும் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து 12,128 பேரும், ரஷ்யாவில் இருந்து 10,450 பேரும், சீனாவில் இருந்து 10,408 பேரும், ஜேர்மனியில் இருந்து 8,950 பேரும், அவுஸ்திரேலியாவில்இருந்து7,226பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஐப்பசி 17
03.11.2025
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை அடிப்படையை அடையாளப்படுத்தாத தீர்மானம்

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு பிரித்தானியத் தமிழர் பேரவை கடிதம்

**கொழும்பு, நவ.2**
**இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய தீர்மானமானது இலங்கையில் இடம்பெற்ற இனமோதலுக்கான அடிப்படைக்காரணத்தை அடையாளப்படுத்துவதற்குத் தவறியுள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக்கிடம் பிரித்தானியத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே பிரித்தானியத் தமிழர் பேரவை இந்தவிடயத்தைச்சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதற்கான சாத்தியப்பாட்டை மேம்படுத்துவதற்குப் பதிலாக, தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டுள்ளது. தமிழர் தாயகத்தில் பல தசாப்தகாலமாக அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுவரும் வன்முறைகளுடன்கூடிய இனவழிப்பின் கூறுகளை முழுமையாகப் புறக்கணித்துள்ளது. நம்பகத்தன்மையும், சுயாதீனத்துவமும் அற்ற உள்ளகப்பொறிமுறைகளிலேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்ந்து தங்கியுள்ளது. இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்திடம் சாட்சியம் அளிக்கும் பாதிக்கப்பட்ட தமிழர்கள், அதுகுறித்த இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே அதை வழங்குகின்றனர். அந்தச் சாட்சியங்கள் இலங்கையின் அரச கட்டமைப்புகளுக்கு அனுப்பப்படுமாயின், அது பாதிக்கப்பட்ட தரப்பினர்மீது ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதற்கு வழிவகுப்பதுடன் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீர்குலைவடையச்செய்யும்-என்றுள்ளது. (எ-இ)





## ஐ.நா. சபையின் இலக்கு தமிழருக்குத் தனிநாடாம்

### கதை கூறுகின்றார் தசநாயக்க

கொழும்பு, நவ.2
13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி வடக்கு, கிழக்கை வேறாக்குவதே ஐ.நா. சபையின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற்றப்படும்வரை ஒவ்வொரு ஐ.நா. கூட்டத்தொடரிலும் முப்படையினரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளநேரிடும். அரசாங்கமும் ஐ.நா.வின் நோக்கத்தை நிறைவேற்றவே பாடுபடுகின்றது. இவ்வாறு கடற்படை முன்னாள் அதிகாரியான ரியர் அட்மிரல் டி.கே.பி.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்தமுறை நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தொடரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என்று மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அவரது உரையை வெளிவிவகார அமைச்சர் முற்றாக நிராகரித்தமை மகிழ்ச்சியளிக்கின்றது.


ஆனால் அதன்பின்னரான அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை அவதானிக்கும்போது, இருதரப்புக்கும் இடையே ஏதேனும் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது. வெளியகப் பொறிமுறைகளை ஏற்கப்போவதில்லை என அரசாங்கம் கூறினாலும், சர்வதேச அழுத்தங்களை எம்மால் தவிர்க்கமுடியாது. இது ஓயாத அலையாகும். அதனால் ஐ.நா.வைப் போன்று நாமும் இடைவிடாது இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்-என்றார். (எ-இ)

## நினைவுதினம்

யாழ்ப்பாணம், நவ.2
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான அமரர் சுவாமிநாதன் சிறி பாஸ்கரனின் 26ஆவது நினைவுதினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. (ச-41-100-66)

## 'துருவேறும் கைவிலங்கு' நூல் வைரமுத்துவிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.2
ஈழத்தமிழ் அரசியற்கைதி விவேகானந்தனூர் சதீஸ் சிறைக்குள் இருந்து எழுதிய, 'துருவேறும் கைவிலங்கு' எனும் நூல், தென்னிந்திய கலைஞரான கவிஞர் வைரமுத்துவிடம் கையளிக்கப்பட்டது.



போருக்குப் பின்னரும் தமிழினம் விடுதலைக்காக ஏங்குகின்ற வலி சுமந்த வாழ்வை அனுபவித்துவருகின்றது. ஈழத்தமிழினத்தின் விடுதலைப் பயணத்தில் பக்கத்து இருக்கைப் பங்காளியாக உறவுபூண்டு வருகின்ற தென்னிந்தியத் தேசத்துக்கு இதனை உரத்துச்சொல்ல வேண்டும் என்பதற்காக ஈழத்தமிழ் திரைப்படத் தொடக்க விழாவுக்கு யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த கவிஞர் வைரமுத்துவை நேரில் சந்தித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் இந்த நூலை அவரிடம் கையளித்தனர்.

தென்னிலங்கையின் உயர்ந்த சுற்றுமதில் சுவர்களுக்குள் துயரனுபவித்துவருகின்ற எமது உறவுகளின் வெளித்தெரியாத பல உண்மைகளின் சாட்சியமாக இந்த ஆவண நூல்வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-27,66)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போதைஒழிப்பு மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டச் செயலமர்வு வரணி வங்கிக்கு உட்பட்ட மந்துவில் வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வளவாளராக பிரதேச செயலக போதைத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்களான இ.தர்மேந்திரா மற்றும் கே.இராசகுமார் ஆகியோர் பங்கேற்றனர். (ச-9)

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர்தின விழா தென்மராட்சி கல்வி வலய தாபனம் மற்றும் பொதுமுகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிவு!

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளின் எதிரொலியாக, ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வர்த்தகம் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)


## ROOM வாடகைக்கு உண்டு

யாழ். திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியில் புதிய வீடு ஒன்றில் Room வாடகைக்கு உண்டு.
பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 076 262 6257

(CS/59797) J-1


## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**திருமதி திரவியம் செல்வரத்தினம்**



எமது கல்லூரியின் ஆசிரியர்
**திரு.செ.ஜெயகாந்தன்** அவர்களின்
அன்புத் தாயாரின் மறைவுக்கு
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

(CS 30659) A

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## துயர் பகிர்கின்றோம்



ஈழத்தின் புகழ்பூத்த மூத்த
சிற்பக்கலைஞனும் திரிஷிகா கலைக்கூட
அதிபரும் எமது 50 வருடகால குடும்ப
நண்பனுமாகிய திருநெல்வேலி
கலைக்குரிசில் சிற்ப கலாவாரிதி
**விஸ்வப் பிரம்மஸ்ரீ நடராசா சற்குருநாதன் (குரு)**

அவர்களின் திடீர் இழப்பை எம்மால்
தாங்கிக் கொள்ள முடியவில்லையே!
என் இதயம் வலிக்கிறதே நண்பா!
அன்னாரின் இழப்பால் தவிக்கும்
குடும்பத்தினருடன் எமது துயரைப்
பகிர்ந்து கொள்கின்றோம்.

**கலாகேசரி சிற்பாலயம்**
**மட்டுவில்.**

**அன்பு நண்பன்**
**கிருஷ்ணபிள்ளை கலாமோகன்**
**குடும்பத்தினர்**

(CR 46208) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 01 . 1936



மறைவு
30 . 10 . 2025

### மனுவல் கிறிஸ்ரி ஜீவரட்ணம்

**(ஓய்வு நிலை உத்தியோகத்தர், இ.போ.ச - கோண்டாவில்)**

சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் கிறிஸ்ரி ஜீவரட்ணம் அவர்கள் கடந்த (30.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவற்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான றிச்சட் கனகரத்தினம் - சோதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சத்தியவதியின் அன்புக் கணவரும், பிரதீபன் (தேசிய சேமிப்பு வங்கி, தலைமையகம்), பிரபாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நர்மதா (தேசிய சேமிப்பு வங்கி, மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்), சுரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான எலிசபெத்ராணி, மாசில்லா ரட்ணபூபதி, அன்ரனி நவரெட்ணம், ஜேசுதாசன் துரைரட்ணம் மற்றும் மேரி திரேசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆதிரா, ஆதிரன், ஆத்மயன், ஸ்ரெபான், எட்றியன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாள் ஆலயம் (St Anne's Church) பாண்டியன்தாழ்வில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**40/2 கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குளி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**075 469 6819**

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1946



மறைவு
01 . 11 . 2025

### செல்வரத்தினம் திரவியம்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் திரவியம் அவர்கள் நேற்று (01.11.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ரதிராணி, விக்கினேஸ்வரன், ஜெயகாந்தன் (ஆசிரியர் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசமூர்த்தி, செல்வவதனா, சுஜிதா (ஆசிரியர் யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிலவாகீசன் - மோகனஜெனனி, மோகனராஜன் (SDB Bank Staff), சங்கவி (யாழ் பல்கலைக்கழகம் இந்துக் கற்கைகள் பீடம் முதலாம் வருட மாணவி), சௌமினி, சரண்யன், கவிசன், பிரணவி ஆகியோரின் பேர்த்தியும், சண்முகவாகீசனின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கந்தசுவாமி கோவிலடி,**
**இணுவில் மேற்கு,இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/59791) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 03 . 1952



மறைவு
31 . 10 . 2025

### கண்ணியசீலன் புஸ்பராணி

மாவிட்டபுரத்தினை பிறப்பிடமாகவும், இணுவில் மற்றும் மாவிட்டபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணியசீலன் புஸ்பராணி அவர்கள் கடந்த (31.10.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வீரப்பு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், கண்ணியசீலன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, சரசவள்ளி ஆகியோரின் மைத்துனியும், கவிதா (மாவிட்டபுரம்), லதா (ஏழலை), தனுசன் (சுவிஸ்), உமாசங்கர் (காந்தன் - வ.மா சுகாதார அமைச்சு சாரதி), தரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரன் (மாவிட்டபுரம்), முருகதாஸ் (ஏழாலை), எழில்ராஜி (இணுவில்), கௌசிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், நிரோஜன், விஜிதா (சுதர்சன்), லோஜிதா, டொசிந்தா (கபில்ராஜ்), கிருந்தா (கஜந்தன்), திரிஷா, திருஷாந், சாய்பிருந்தன், சாகித்தியா, சாஹிஷா, சானுகா, சானுஜா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், நிலானிக்கா, கிஷானா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கருணாகர பிள்ளையார் வீதி,**
**இணுவில் கிழக்கு.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 990 7023**

(CS/30506) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 12 . 1939



மறைவு
01 . 11 . 2025

## கந்தையா தர்மலிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கலட்டிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் 01.11.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாரிமுத்து - முத்துமாரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவயோகத்தின் பாசமிகு கணவரும், பரமேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கதிரமலை, காலஞ்சென்ற ஜெகநாதனின் அன்பு மைத்துனரும் ஆவார். வைதீகன் (கோபி), கல்யாணி (இந்து - லண்டன்), அச்சுதன் (கண்ணன் - லண்டன்), ரமணன் (ரமணி - லண்டன்), காலஞ்சென்ற செந்தூரன் (வவா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 12.00 மணியளவில் 42/3 சேர்.பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 59786) E

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## சட்ட ஆலோசகர்களை வழுங்குநர்களாகப் பதிவு செய்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2026/2027

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்ட வாதியாகச் செயற்படுதல் மற்றும் சபைக்கு தேவையான சட்ட ஆலோசனைகளினை எழுத்து மூலம் வழங்குவதன் பொருட்டு சபையால் சட்டவாதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் 2025.11.03ம் திகதியிலிருந்து 2025.11.17ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை படிவக் கட்டணமாக ரூ.3,500.00 இனை மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தி படிவங்களினைப் பெற்றுப் பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 18.11.2025ம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மூலையில் "சட்ட ஆலோசகர்களை வழங்குநர்களாகப் பதிவு செய்தலுக்கான விண்ணப்பம் 2026/2027 எனக் குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்". என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் ஃ கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ பிரசன்னமாக அனுமதிக்கப்படுவர்.

நிபந்தனைகள் :

1) யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

2) குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவமும் மும்மொழிப் புலமையும் முன்னுரிமையாகக் கொள்ளப்படும்.

3) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தி. பிரகாஷ்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

**02.11.2025**

# இளமாணிப்பட்டம் கற்கைக்கு விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் மென்பொருள் பொறியியல் இளமாணிப்பட்டக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும், கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,

மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி நடத்தப்படும் தேர்வுப் பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.


விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும், கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச–41)

**புதிய கல்வியாண்டு - 2026**
**தரம் - 6 கணிதம்**
ஆசிரியர் திரு. T. அற்புதராஜா
**புதிய பிரிவு ஆரம்பம்**
திங்கட்கிழமை (03.11.2026)
மாலை 5.00 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
192/20, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு : 077 722 2478

**வேலையாட்கள் தேவை**
கொழும்பில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலுக்கு ஆண் தொழிலாளர்கள் மற்றும் யாழ்ப்பாண உணவுகளை சமைக்கக்கூடிய ஒரு சமையல்காரர் தேவை.
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-
தொடர்புகளுக்கு:-
077 676 6437, 077 134 5588
(CS/59793) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 10 . 1945



இறப்பு
01 . 11 . 2025

## தம்பியப்பா பாலதயானந்தன்

**(சிறுவருக்கான அபிவிருத்தி நிலைய ஸ்தாபகர் (CFCD))**

கெருடாவில் வடக்கு மயிலியதனையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா பாலதயானந்தன் 01.11.2025 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - சிவயோகரத்தினம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தவபுத்திரன், விவேகானந்தன், யோகேஸ்வரி, அமிர்தானந்தர் மற்றும் பேரானந்தமலர், சச்சிதானந்தன் ஆகியோரின் சகோதரனும், சிவஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், கஸ்தூரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), கபிலன் (முன்னாள் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணாஈஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைச்சு வடக்கு மாகாணம்), சுஜாதா (முன்னாள், கணக்காய்வு பரிசோதகர், கணக்காய்வு திணைக்களம்) அவர்களின் மாமனாரும், ஷாருகேசி, கோபிஷாலினி, கிஷானி, கிருத்திக் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாக்கியம், சின்னத்தங்கச்சி, சிவமணி மற்றும் தங்கரத்தினம், சிவனேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59785) E

**இல.22, சைவப்பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு**
**கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 196 2098 (மகள்)**
**077 307 6902 (மருமகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 09 . 1948



மறைவு
31 . 10 . 2025

### சிவலிங்கம் கருணாதேவி (இந்திரா)

ஆனைக்கோட்டை உயரப்புலத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான சிவலிங்கம் கருணாதேவி (இந்திரா) கடந்த 31.10.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் கிராம விதானையார் செல்லையா சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர் அமரசிங்கம் சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அமரசிங்கம் - இராசக்ஷ்மி தம்பதியரின் மருமகளும், அரவிந்தனின் (கனடா) பாசமிகு தாயாரும், கலைவாணியின் (கனடா) அன்பு மாமியாரும், சஞ்சேய் (கனடா), மாயா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், லோகதாசன் (கனடா), சிவதாசன் J.P. தில்லைநாதன், கருணாகரன் (அமெரிக்கா), ஜெயேந்திரராணி (கனடா), காலஞ் சென்றவர்களான செல்வராணி, புஸ்பராணி, திருநாவுக்கரசு, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை எருக்கலம்பிட்டி (கரையாம்பிட்டி) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 30662) A

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியிலிருந்து 100m தூரத்தில் ஆடிய பாதம் வீதியில் 2 ம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
**0777 590 799, 077 8393 896**

(CS 30656) A

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும்,
வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை சங்கரத்தையினை
வதிவிடமாகவும் கொண்ட
எமது குடும்பத் தலைவர்

### திரு. கந்தசாமி தர்சனன்

மலர்வு 24.01.1978 — உதிர்வு 06.10.2025

அவர்கள் நோயுற்றிருந்தபோதும், சிவபதமடைந்த வேளையிலும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மேலும் எதிர்வரும் (05.11.2025) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை தென்மேற்கு,
வட்டுக்கோட்டை, சங்கரத்தை.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 10 . 1943



மறைவு
31 . 10 . 2025

### சபாபதி அரசரத்தினம் (ரத்தினம்)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி அரசரத்தினம் (ரத்தினம்) அவர்கள் கடந்த (31.10.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செல்வரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, வள்ளிப்பிள்ளை, சின்னத்தம்பி, கந்தையா, செல்வதுரை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கருணாகரன் (ஜேர்மனி), பாஸ்கரன், கயதீபன், சஞ்சீவன் (லண்டன்), பரமராசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானேஸ்வரி (ஜேர்மன்), ஜெயச்சித்திரா, விஜிதா, மாலதி (லண்டன்), நித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், வினுஷா, தியாஷா, சஸ்வின் (ஜேர்மன்), சதீஸ் (லண்டன்), ரிஷிகரன், திஸாரா, கனிஸ்ரன், மதுஸ்ரன், கஜலச்சிகன், கவிசன் (லண்டன்), தனுசன், பவிசன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், புஸ்பராணி, தங்கராணி, தவராசா, செல்வராசா, நவரத்தினராசா, காலஞ்சென்ற பரமலிங்கம், மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புன்னாலைக் கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சஞ்சீவன் (லண்டன்) - 0044 744 801 8745
பாஸ்கரன் (இலங்கை) - 0094 077 632 0044
கயதீபன் (இலங்கை) - 0094 077 138 5266
பரமராசன் (இலங்கை) - 0094 077 007 8655 (CS/59798) A

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 04 . 1947



மறைவு
31 . 10 . 2025

### துரைசிங்கம் கமலாதேவி

(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

நாயன்மார்கட்டினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் கமலாதேவி அவர்கள் கடந்த (31.10.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், SK துரைசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - வீடமைப்பு அதிகார சபை) அவர்களின் பாசமிகு மனைவியும், ரஞ்சிதராஜ் (சுவிஸ்), காலஞ்சென்ற யசிந்தராஜ் மற்றும் வினீஷ்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கல்யாணி (சுவிஸ்), அனோஜா (ஆசிரியர், மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வைரமுத்து - இராசமணி மற்றும் ஞானப்பெருமாள் - பத்மாவதி (கரவெட்டி), அரியநாயகம் - சிறிதேவி, நடராஜா-புஸ்ப ராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற முருகேசு பராசக்தியின் அருமை மைத்துனியும், பிரீத்தி (சுவிஸ்), ஆருதி (சுவிஸ்), அஜய் (சுவிஸ்), திலோக்ஷணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.270, கனகரட்ணம் வீதி, நாயன்மார்க்கட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.270, கனகரட்ணம் வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல் : குடும்பத்தினர்.
077 433 4846
021 222 6911

(CS 59799) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ. 2
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால கணினிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Honda Super Cup 50 (Japan) விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 503 7675

## வீடு வாடகைக்கு

கொழும்பு 03 கொள்ளுப்பிட்டி Marine drive, Galle Road, Railway Station அண்மையில் 2 Rooms with attached Bathroom, Hall, Kitchen வசதிகளுடன் Ground Floor வீடு 1 வருடம் வாடகைக்கு உண்டு. Residential / Commercial Purpose இற்கு உகந்தது.

தொடர்பு: 071 605 0074

## காணி விற்பனைக்கு

யாழ் சுன்னாகம் K.K.S வீதிக்கு அருகாமையில் சிவன் வீதியில் பாவனைக்குரிய வீடு 2 3/4 பரப்பு காணி தரமான உறுதிப் பத்திரங்களுடன் விற்பனைக்கு உண்டு. 28 மில்லியன். No Brokers

SP.Karan's 077 343 4005

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ் காணும் பணியாளர்கள் தேவை.

1. Manager (05 வருட அனுபவம்)
2. Administration
3. Store Keeper
4. Sales Assistant
5. Packing - பொதியிடல்

வயது எல்லை : 18-35
யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:
077 41 95 209, 077 41 95 218

## வேலையாட்கள் தேவை

கொழும்பு நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு: 077 386 6250



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

## பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் இரு சிறுவர்களை பராமரிக்க பணிப்பெண் தேவை.
தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 076 209 9227

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் அமைதியான சூழலில் A/C உடன் கூடிய 4 அறைகள் விசாலமான இரு ஹோல்கள், சமையலறை, சாப்பாட்டு அறை, 2 இணைந்த குளியலறைகள், 1 பொது குளியலறை முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு குடியிருக்க மட்டும் வாடகைக்கு உண்டு. மாத வாடகை 80 000/=

தொடர்பு: 077 711 0015

## அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபம் (ASR WEDDING HALL)

### முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் இனிய கிறிஸ்மஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா, கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லீம் நிக்ஹா (திருமணங்கள்), தென்னிந்தியப் பாடகர்களின் நிகழ்ச்சிகளை செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் மற்றும் திறமை வாய்ந்த போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 09 மணி முதல் மாலை 04.30 மணிவரையும் சனி காலை 09 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் மண்டபத்தை பார்வையிடலாம். ஞாயிறு விடுமுறை

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி எண்: 076 744 6064, 021 222 1355

## The 72nd Annual Festival of Carols
## by the
## Combined Choirs of
## Schools and Colleges of the North

will be held at the St. John's College Hall
on Saturday 08th November 2025
at 4.00 p.m.

Admission: By Hymn Sheet - Rs.50/=

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION ,HIGHER EDUCATION AND VOCATIONAL EDUCATION

### VACANCIES

Applications are invited from qualified persons for the below mentioned posts in University College of Jaffna

- LECTURER (PROBATIONARY) / SENIOR LECTURER GRADE II/ I IN COSMETOLOGY / PRODUCTION TECHNOLOGY / HOSPITALITY MANAGEMENT
- DEMONSTRATOR IN BUILDING SERVICES TECHNOLOGY / COSMETOLOGY / FARM MACHINERY TECHNOLOGY
- INSTURCTOR IN IT
- ASSISTANT BURSAR
- SECURITY OFFICER

**Closing Date: 01.12.2025**

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7791

02.11.2025 Rector, University College of Jaffna

## அக்கராயன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) பதிவு இலக்கம் - KN/150

கிளைப் பொதுச்சபைக்கூட்ட அறிவித்தல்
கிளைக்குழுக்களை தெரிவு செய்தல் 08.11.2025 சனிக்கிழமை

மேற்படி சங்கத்தின் துணைவிதி 28(2)இன்படி அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களை கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.இதற்கு அமைய வாக்களிக்கத்தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை அழைப்பாக ஏற்றுக்கொண்டு கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்காக கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சமூகமளித்து கிளைக்குழுவை தெரிவு செய்ய உதவவும்

01 கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும்
08.11.2025 சனிக்கிழமை முற்பகல் 10.00மணி
02 கிளைப் பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம்

| கிளை இலக்கம் | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல -01 அ.த.க.பாடசாலை |
| 02 | கோணாவில் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 03 | யூனியன்குளம் | யூனியன்குளம் அ.த.க.பாடசாலை |
| 04 | அக்கராயன் | அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 05 | வன்னேரிக்குளம் | வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் |
| 06 | ஆனைவிழுந்தான் | ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை |
| 07 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் பொதுநோக்கு மண்டபம் |
| 08 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை |
| 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல -02 அ.த.க.பாடசாலை |

முக்கிய கவனத்திற்கு
01. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள அங்கத்தவர்களின் 1/4 அல்லது 25பேர் இதில் எது குறைவோ அதுவாகும்.
02. கிளைப் பொதுச் சபைக்கு சமூகமளித்துள்ள தகுதியான வாக்காளர்களிடமிருந்து 09 உறுப்பினர் தெரிவு செய்யப்படுவர். இக் கிளைக்குழுவிற்கு 18 - 35 வயதிற்குகிடைப்பட்ட இருவரையும், பண்டக்குழுவிலிருந்து ஒருவரும் மகளீர் குழுவிலிருந்து இருவரும் தெரிவு செய்யப்படுவர்.

செயலாளர்
அக்கராயன் பல.நோ.கூ.சங்கம்
அக்கராயன்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்சினைகளுக்கு குரல் எழுப்பவேண்டும்!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
அரசியல் என்பது தருணம் பார்த்து நடந்துகொள்ள வேண்டியது அல்ல. மக்களுக்குப் பிரச்சினை வரும்போது முன்னிலையாக வேண்டும் அந்த பணியை நாம் செய்வோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள பேரணியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் எதேச்சதிகார பயணத்துக்கு எதிராகவே 21 ஆம் திகதி ஒன்றிணையவுள்ளோம். நல்லாட்சியின்போது எதிரணிக்குரிய பொறுப்பை நாம் சிறப்பாக நிறைவேற்றினோம். இனியும் அவ்வாறு நடப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


## மணமகன் தேவை

1996, இந்து, பூரட்டாதி, DOCTOR
பூர்வீகம் – பருத்தித்துறை, வதிவிடம் – உடுப்பிட்டி
மணமகள் பதிவு இல: 11388.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1995, இந்து, திருவோணம், DOCTOR
பூர்வீகம் –மந்திகை, வதிவிடம் –யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 10259.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com


# சண்டிலிப்பாய் பிரதேச கலை இலக்கிய விழா

யாழ்ப்பாணம், நவ.2
சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசார அதிகாரசபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், கலை இலக்கிய விழா சண்டிலிப்பாய் சீரணி மஹால் திருமண மண்டபத்தில் அமரர். பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை ஞாபகார்த்த அரங்கில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 1.45 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதன்போது, 2024ஆம் ஆண்டுக்கான தேசிய கலை இலக்கிய விழாவில் தேசிய மட்டத்தில் சாதித்தவர்களுக்கான கௌரவிப்பு, பிரதேசமட்ட, தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு, மறைந்த எழுத்தாளர் கலாபூஷணம் கே.ஆர். டேவிட் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-25, 66)




# கெருடாவிலில் பாலம் புனரமைப்பு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ.2
பருத்தித்துறை வீதி (புலோலி வீதி) கெருடாவிலில் பாலம் அமைக்கும் பணியின் ஆரம்பகட்ட வேலைகளை தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எவ்.சி.சத்தியசோதி அண்மையில் ஆரம்பித்துவைத்தார்.

கெருடாவில் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் இன்னல்களை எதிர்நோக்குகின்றன. எனவே பாலம் அமைத்து நீர் வெளியேறுவதற்கு ஆவனசெய்யுமாறு மூன்று வருடங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற தென்மராட்சிப் பிரதேச செயலாளர் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் உடனடியாக வெள்ளம் வழிந்தோடக்கூடியவாறு பாலம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்துவைத்தார். (ச-159)


## மரண அறிவித்தல்



பிறப்பு 02.08.1980
இறப்பு 01.11.2025

### பாக்கியநாதர் டொன் பொஸ்கோ

யாழ். பலாலியை பிறப்பிடமாகவும் வேம்படி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதர் டொன் பொஸ்கோ நேற்று (01.11.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான பாக்கியநாதர் மொனிக்கா தம்பதியரின் அன்பு மகனும், சிறிதரன்.- பத்மினி தம்பதியரின் அன்பு மருமகனும், வினோதினியின் அன்புக் கணவரும், டிலக்சிகா, டுசிக்கா, டானியல் ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதா, நெல்சன், ஜான்சி, ஜெமீலா, வில்பிறட், அல்பிறட், டொறின் (யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), பாமினி, காலஞ்சென்ற ஜெசி, றெஜினோல்ட் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜன், ரஞ்சன் வண்ணம், ஜானு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.




# காப்பெற் வீதியாக மாறும் புளியம்பொக்கணை வீதி

கிளிநொச்சி, நவ.2
கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து புளியம்பொக் கணைக் கிராமத்துக்குச் செல்கின்ற வீதியின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் கண்டாவளைப் பிரதேச செயலர், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 1.3 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி 5.5 மில்லியன் ரூபா நிதிச்செலவில் காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது. (ச-25, 113).


## உடனடி வேலை வாய்ப்பு




யாழ். நகரில் இயங்கும் நிறுவனத்திற்கு பின்வரும் பணிவெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவை.

1. பாதுகாப்பு உத்தியோகத்தர்
2. வீட்டு பராமரிப்பு
3. உதவி ஊழியர்
4. சமையளாளர்


தகுதியுடையவர்கள் 03.11.2025 திங்கட்கிழமை கீழ் காணும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

உதயன் விடுதி
392/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 115 4843


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
10
05
1946



மறைவு
01
11
2025

### தியாகராசா சிவசுப்பிரமணியம்

சிங்கம் வீதி, உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தியாகராசா சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (01.11.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராசா தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 833 1449 சி.குருகுலசிங்கம் (JP) குலம்
077 579 3194 அ.தர்சினி

(CS 30657) A

# மார்ச் முற்பகுதியில் மாகாணத்தேர்தல்!

## பெரமுன ஆரூடம்

கொழும்பு, நவ.2

மார்ச் முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்குரிய சாத்தியம் இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திமீது இந்நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்தனர். ஆனால் அரசாங்கத்தின் தற்போதைய பயணத்தைப் பார்க்கும்போது அந்த நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர்.

தமிழக சட்டசபைத் தேர்தல் மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரலில் நடக்கவுள்ளது. தேர்தல் களத்தில் இலங்கை விவகாரமும் எதிரொலிக்கும். எனவே, இங்கு மாகாணசபைத் தேர்தல் நடப்பதற்கு அதுவும் தாக்கமாக அமையும். அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்றும் சஞ்ஜீவ எதிரிமான்ன குறிப்பிட்டார்.

(ச-44)

**பால் பண்ணை வேலையாள் தேவை**

பண்ணை வேலை தெரிந்த வேலையாள் தேவை.
பசுக்களை பராமரிக்க கூடிய அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு:- 076 287 8655

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ். மணியந்தோட்டத்தில் 3 பரப்பு உறுதிக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 302 4234
(CS 30655) A

**திருநெல்வேலி காணி விற்பனைக்கு**

பரப்பு : 01, 02, 2 1/4
பலாலி வீதி : 75 மீற்றர்
திருநெல்வேலி சந்தி:300 மீற்றர்

தொடர்பு:
077 253 2575
(CS 30653) A

**வேலை ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்கள் மற்றும் கொத்து, றைஸ் மற்றும் றொட்டி போட தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு கொள்ளவும்.
077 2030 625
(CS )A

**பால் மாடுகள் தேவை**

12 Litter பால் கறவை மாடுகள் தேவை.
கன்று இன்று 31 நாட்களுக்கு ஆன மாடுகள் தேவை.

076 287 8655

**வீட்டு வேலைக்கு ஆள் தேவை**

வீட்டு சமையலுக்கு ஆள் தேவை. சமையல் அனுபவம் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தங்கி நிற்கும் வசதி உண்டு.
சம்பளம் : 50,000 - 70,000/=
ஹோட்டல் சமையல் அனுவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 070 52 79 841
(CS 30660) A

## மரண அறிவித்தல்

பிறப்பு
01
10
1928



இறப்பு
01
11
2025

### அப்புத்துரை பரமேஸ்வரி

மாதகலை பிறப்பிடமாகவும் அரசடி வீதி, இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பரமேஸ்வரி அவர்கள் நேற்று (01.11.2025) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் அப்புத்துரை (ஓய்வுபெற்ற CTB நடத்துனர்) அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர் யோகேஸ்வரி, கனகாம்பிகை, கணேசரத்தினம், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் கனகரத்தினம், சாந்தபவானி, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், இராஜேஸ்வரி, மல்லிகாதேவி (UK), புவனேந்திரராணி (France), கதிர்காமநாதன் (Canada), மகாலட்சுமி, அமரர் யோகராணி, சண்முகநாதன் (Swiss), ஸ்ரீரங்கநாதன் (Swiss), நாகேஸ்வரி (Swiss) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகநாதன், அமரர் முத்துக்குமாரு, அமரர் சிவராசா (France), கோசலா (Canada), சின்னத்தம்பி, ஜெகதீஸ்வரி (Swiss), நந்தினி (Swiss), சிவலிங்கம் (Swiss) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சற்குணமலர், யோககிருஸ்ணன், சந்திரதிலீபன், கார்த்திகை தீபன் (UK), ஜனார்த்தனி, ரேணுகா (UK), ரஜேந்திரன் (UK), துசிக்கா (UK), தர்சிகா (UK), பிருந்தினி (France), சாமினி (France), சேந்தன் (France), சேயோன் (Canada), சதுசன் (Canada), நிரோஷன் (UK), மதுசன் (Swiss), கீர்த்திகா (UK), சந்தியா (Swiss), லக்ஷிகா (Swiss), அபிலாஷ் (Swiss), சகானா (Swiss), ரக்சனா (Swiss), சானுஜன் (Swiss), மிதுஷா (Swiss), மதுசா (Swiss), அரிஹரன் (Swiss) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2025) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


இருபாலை கிழக்கு,
இருபாலை.
T.P: 076 68 56 264

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்

(CS 30661)

## மரண அறிவித்தல்

மலர்வு
25
01
1938



உதிர்வு
01
11
2025

### அம்பலம் சிவானந்தன்

(ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியரும், முன்னைநாள் சர்வதேச கெயர் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தரும்)

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலையை பிறப்பிடமாகவும் கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சிவானந்தன் நேற்று (01.11.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற முத்துத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவறஞ்சன், சிவாஜினி, சிவரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைச்செல்வி, பகீரதன், ஜதபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜன், அனோஜன், சுவர்ணா, சரண்ஜா, சின்மயன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான பொன்னம்மா, விசாகம்மா, சண்முகசுந்தரம் மற்றும் விசுவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கருவப்புலம் வீதி, 5ம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (03.11.2025) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - 072 230 5987
பெறாமகன் - 077 759 4962
மருமகள் - 077 739 6200

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செம்மணிப்...

தெற்கில் இருந்து வருகைதந்த சமவுரிமை அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளும், ஏனைய புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளும், அவற்றின் மீதான அகழ்வுப் பணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், பட்டலந்தை வதைமுகாம் தொடர்பான விசாரணைகள், அரசியற்கைதிகளின் விடுதலை என அனைத்து விடயங்களிலும் அரசாங்கம் விரைவாகச் செயற்பட வேண்டும். ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதியையும், நம்பிக்கையையும் வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவும் நிறைவேற்றவும் வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது - என்றனர். (அ-ம-26)



## சட்டவிரோத...

அவர்கள் பொலிஸாரின் அறிவுறுத்தலைப் பின்பற்றாமல் தப்பிச் சென்றுள்ளனர். இதையடுத்து, அந்த வாகனத்தை விரட்டிச் சென்ற பொலிஸார், பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் கறுக்காய்த்தீவுப் பகுதியில் வைத்து முட்கம்பிகளை வீதியின் குறுக்காகப் போட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர். இதையடுத்து, வாகனத்தைக் கைவிட்டுவிட்டு ஆறு சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர். வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கையிடும் நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-100)

# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு; இனப்பிரச்சினையைத் தூண்டும்

## ரவிகரன் எம்.பி. சீற்றம்

**வவுனியா, நவ.2**

**வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட வெடிவச்சகல்லு, திரிவைச்சகுளம் பகுதியிலுள்ள தமிழ்மக்களின் பூர்வீக விவசாய நிலங்களை ஆக்கிரமித்து உயிர் அச்சுறுத்தலையும் விடுக்கின்றனர். இதனூடாக மீண்டும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கக்கூடாது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.**

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திரிவைச்சகுளத்தின் கீழான தமது பூர்வீக வயல்நிலங்களைத் துப்புரவு செய்த எமது தமிழ் மக்களை வனவளத் திணைக்களம் கைதுசெய்து நீதிமன்றில் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது. குறித்த பகுதி வனவளத்திணைக்களத்துக்குரிய ஒதுக்கக்காட்டுப் பகுதியென்பதற்கு ஆதாரமாக நீதிமன்றில் வனவளத்திணைக்களம் எவ்வித சான்றுகளையும் கையளிக்கவில்லை.

இங்கு தமிழ் மக்கள் திரிவைச்சகுளம் கமக்கார அமைப்பாக பூர்வீகமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாகவே தமிழ்மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர். இதே வேளை நீதிமன்றில் தமிழ் மக்களுக்கு எதிராக வனவளத் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது குறித்த பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆக்கிரமித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெரும்பான்மை இனத்தவர்கள் 10பேருக்கு, 40ஏக்கர் திரிவைச்ச குளம் வயற் காணிகளை ஒருபோகத்துக்கு மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருந்தது. திருட்டுத்தனமாக எமது மக்களின் காணிகளை அபகரிக்கின்ற ஒரு திருட்டுச்சபையே, அதிகாரசபையே மகாவலி அதிகாரசபை. இத்தகைய மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் துணையுடன் தற்போது திரிவைச்சகுளம் பகுதியை அண்டியுள்ள இடங்களில் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் அடர்வனங்களை அழித்து ஆக்கிரமிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு சட்டவிரோதமாக அடர்வனங்களை அழித்தவர்களுக்கெதிராக உரிய சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. அத்தோடு விவசாய நடவடிக்கைக்கென ஒருபோகத்துக்கு மாத்திரம் 40ஏக்கர் காணிகள் ஒப்பந்த அடிப்படையில் மகாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தபோதும், பெரும்பான்மை இனத்தவர்கள் அந்த ஒப்பந்த நடைமுறைகளை மீறித் தொடர்ந்தும் அங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே இந்த அத்துமீறல் செயற்பாட்டினூடாக இனப்பிரச்சினையை தோற்றுவிக்க அரசாங்கம் இடமளிக்கக்கூடாது - என்றார். (ச-246)

## நாளைமறுதினம்...

செய்யப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் அனைத்தும் நிறைவடையும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கஞ்சா...

இருந்தும் பெருமளவு கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்தக் கஞ்சாப் பொதிகள் நூறு கிலோவுக்கும் மேற்பட்ட நிறையுடையவை என்று பொலிஸார் கூறியுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கஞ்சா கடத்தல் இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஒருதொகுதி கஞ்சா பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமையவும், மேலதிக தகவல்களுக்கு அமைவாகவும் வீடொன்றில் தேடுதல் நடத்தப்பட்டு, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 46 கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த வீட்டிலிருந்த பெண்ணொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர்கள் நால்வரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## இலங்கைக்குள்...

வருகின்றது. போதைப்பொருள் வலையமைப்புத் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளுக்கு அமையவே, இலங்கைக்குள் போதைப்பொருள்களைக் கடத்தும் பிரதான நபர்களாக பாகிஸ்தானியர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

'இலங்கைக்குள் போதைப்பொருள்களைக் கடத்தும் 25 முக்கியமான புள்ளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் பலர், இலங்கையில் செயற்படும் ஆயுதக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன' என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முழுமையான தகவல்களை வெளியிடும் பட்சத்தில் அவை விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே, மேலதிக நடவடிக்கையின் பின்னர் இதர விடயங்கள் வெளிப்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் கூறியுள்ளார். (அ-ம)

## டிப்பர்...

கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியில் டிப்பரும், காரும் நேருக்குநேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த காரும், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சல்லியுடன் (கற்கள்) பயணித்த டிப்பருமே நேற்று மாலை இவ்வாறு கோர விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

விபத்தில், காரின் முன்பகுதி சிதைவடைந்ததுடன், டிப்பரும் கவிழ்ந்துள்ளது. டிப்பர் சாரதியும், காரில் இருந்த இருவருமென மூவரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். பளை மருத்துவமனையில் வழங்கப்பட்ட முதற்கட்ட சிகிச்சைகளைத் தொடர்ந்து, அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

டிப்பரில் இருந்த சல்லிக் கற்கள் வீதிக்குக் குறுக்காகக் கொட்டப்பட்டதால், போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது. பின்னர், அவற்றை அகற்றி சீரான போக்குவரத்தை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் முன்னெடுத்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

## 2028 ஆம்...

செயற்பட்டுவருகின்றது என்று அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது அரிசிக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. அரிசியின் கையிருப்பு உரிய வகையில் பேணப்படுகின்றது. எனினும், 2028ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டுக்குள் அரிசி இறக்குமதி செய்யப்படாது. அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (அ-ம)

## அரச...

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளை அரசாங்கம் ரத்துச் செய்ததைத் தொடர்ந்து, அவர்கள் அரச மாளிகையில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலமாக வசித்துவந்த அரச மாளிகையில் இருந்து மஹிந்த ராஜபக்ச அண்மையில் வெளியேறியிருந்தார். தற்போது சந்திரிகாவும் அரச மாளிகையில் இருந்து வெளியேறவுள்ளார் என்றும், அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

நல்லூர் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள Family Dental Care இற்கு A/L படித்த பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :-
076 789 8983

## வேலை ஆட்கள் தேவை

கௌதாரிமுனை, பூநகரி கடற்கரை உல்லாச விடுதி கட்டுமானப் பணிகளுக்கு வேலையாட்கள் தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:- +94 77 171 4086

## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய சிறுநீரகம் செயலிழந்த நபரொருவருக்கு O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாகத் தேவை. ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
071 486 2167

## வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் கடை வாடகைக்குத் தேவை
தொடர்பு: 076 975 2003

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை

- வயதெல்லை 18 - 24
- அனுபவம் உள்ள ஆண்கள்
- யாழ் நகரிற்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது
- தொலைபேசி திருத்தத் தெரிந்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு: 077 858 5887

## பராமரிப்பாளர் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிற்கு குழந்தையை பராமரிக்கவும், வீட்டு வேலைகள் செய்யவும் அனுபவமுள்ள பெண் தேவை.
வயதெல்லை 18 - 30 வயதிற்குட்பட்டவர். தங்குமிட வசதி வழங்கப்படும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
சனி, ஞாயிறு லீவு வழங்கப்படும்.
075 880 7718, 077 258 5564

## உடனடி வேலைவாய்ப்பு

Room boys : யாழ் நகரில் இயங்கும் எமது விருந்தினர் விடுதிக்கு அறைபராமரிப்பாளர் (Room boy) / கிளீனர் (ஆண்) தேவை.

- 18 - 25 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும்.
- தங்கி நின்று வேலை செய்பவர்கள் மட்டும் விரும்பத்தக்கது.
- உணவு,தங்குமிடம் வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கபடும்.

தொடர்புகளுக்கு:-
077 908 7616

## வேலைக்கு ஆட்கள் தேவை

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.
வயது எல்லை 20 - 40 க்கு உட்பட்ட ஆண்கள் தேவை.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- இயந்திர இயக்குனர் (Machine Operator)
- சரக்கறைக் காவலர் (Store Keeper)
- ஓட்டுனர் (Drivers)
- நாட்டாமை தொழிலாளர்கள்
- கூலித்தொழிலாளர்கள் (Laborers)

தொடர்புகளுக்கு:
RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala. 077 434 6367

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 08 . 1955



மறைவு 13 . 11 . 2024

### அமரர் சர்வேஸ்வரலலிதா கமலநாதன்

நினைவுகள் மலர்கின்றன இதயத்தின் ஓரத்தில்,
நீங்கள் இல்லாத ஒவ்வொரு நாளும் வலியாய் நிற்கிறது.
புன்னகை முகம் கண்முன் மிதந்து வருகின்றது,
உங்கள் குரல் இன்றும் காதுகளில் ஒலிக்கின்றது.

நேரம் நகர்ந்தாலும், நெஞ்சம் மறக்காது,
நேசம் நிறைந்த பாதம் எங்கள் வழிகாட்டி.
கண்ணீரால் நனைந்த இதயம் உங்களைத் தேடுகிறது,
அன்பால் நிரம்பிய உங்கள் நிழல் எங்களோடு வாழ்கிறது.

ஒரு ஆண்டு கடந்தும் நினைவு புதிதாய்,
உங்கள் பெயர் எங்கள் உயிரின் துடிப்பாய்.

02.11.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஐயனார் கோயிலடி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 10 . 1950



இறப்பு 31 . 10 . 2025

### திருமதி இரத்தினசிங்கம் விமலாபத்மினி

புலோலி வடகிழக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரத்தினசிங்கம் விமலாபத்மினி அவர்கள் நேற்று முன்தினம் (31.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் வேதநாயகம் - மேரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினசிங்கம் (ஓய்வு நிலை ஊழியர், மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும், பாமினி (கனடா), சுதாகரன் (லண்டன்), பிரபாகரன் (கனடா), பிறேமினி (கனடா), சுகந்தினி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மங்களேஸ்வரன், சஜிதா, ரியூனி சோபிகா, ரதீசன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், ஜெகநாதன், லோகநாதன், ஆன் கௌசாம்பிகை, பற்றிக்கா ராகினி, இமானுவேல் இராஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜேந்தினி, தக்ஷாயினி, அக்ஷயா, கிரிஷ், கிஷோன், ரிவோன், சிவோன், ரக்ஷனி, ரணிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் நாளை (03.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புலோலி சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 401 7859


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நல்லதொரு சீதனத்தால் நன்ருக மாப்பிள்ளை
நல்லபடி நாணத்தால் வந்தாரே -- நல்லநாளில்
நல்லமாமன் சீதனத்தில் நல்லவெறித் தாக்குதலும்
நல்லமாமன் நெற்றியது மீது...

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை (02.11.2025) சிகரம் :163

# கட்புலனாகா அரங்கு; கட்புலனாகாத போர்?

நிலாந்தன்



கடந்த 30ஆம் திகதி சுகததாச உள்ளரங்கில் அரசாங்கத்தின் போதைப் பொருளுக்கு எதிரான ஒரு செயற்றிட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரமுகர்கள் அமர்ந்திருந்த அரங்கிற்குள் திடீரென்று ஒருவர் மேடையை நோக்கி வேகமாக நகரத் தொடங்கினார். அங்கிருந்த பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரிகள் அவரைத் தடுக்க முயற்சித்தாலும் அவர் மேடையில் ஏறிவிட்டார். உணர்ச்சிக் குழம்பாக காணப்பட்ட அந்த நபர் மேடையில் நின்று அரங்கில் இருந்தவர்களை நோக்கி அழுதழுது கதைக்கத் தொடங்கினார். இல்லை,நடிக்கத் தொடங்கினார் என்று தான் சொல்லலாம். ஏனென்றால்,அது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒரு நாடகம். கண்ணுக்குப் புலனாகாத அரங்கு "இன்விசிபிள் தியேட்டர்" என்று அதை அழைப்பார்கள். போதைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்ட தனிநபர் நாடகம் அது. அதில் நடித்தவர் பிரேம் ஜெயந்த கபுகே என்ற கலைஞர்.

நல்ல விஷயம். நாடு முழுவதுக்குமான ஒரு முக்கியமான வேலைத்திட்டத்தை அவ்வாறு கலை உணர்வோடு அணுகியதும் அரங்கில் கூடியிருந்தவர்கள் எதிர்பாராத விதத்தில் அதிர்ச்சியூட்டும் ஒரு கலை நிகழ்ச்சி மூலம் விழிப்பை ஏற்படுத்தியதும் பாராட்டத்தக்கவை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இதயமாக இருக்கும் ஜே.வி.பி. ஓர் அரசியல் இயக்கம் என்ற அடிப்படையில் அது மக்கள் மத்தியில் எப்படிக் கருத்தைக் கொண்டுபோகவேண்டும் என்ற விடயத்தில் தெளிவாகச் செயற்படுகிறது.

போதைக்கு எதிரான போரை அநுர கலை உணர்வோடு தொடங்கியிருக்கிறார். ஆனால் போதைக்கு எதிரான யுத்தம் ஒரு கலையா?

நிச்சயமாக இல்லை. அது ஈவிரக்கம் இல்லாத ஒரு கொலை நிகழ்ச்சித் திட்டம் என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் பிரேசில், பிலிப்பைன்ஸ்,சில லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவற்றிலும் நிலைமை அதுதான். ஏனென்றால் போதையை ஒழிப்பது என்பது ஒரு வகையில் போர் தான். நிச்சயமாக அது இன்விசிபிள் தியேட்டர் அல்ல.

அப்படி ஒரு போரைச் செய்ய அநுர தயாரா? அந்தத் தொடக்க நிகழ்வில் அவர் கூறுகிறார்... "நாம் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டிய நேரம் இது என்று நான் நினைக்கிறேன். நாடே ஒன்றுபட்டு இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக, தனிப்பட்ட ஒருவருக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தாலும், தனியாக முடியாது. அரசாங்கத்தால் மட்டும் முடியாது. பொலிஸால் மட்டும் முடியாது. அரச கட்டமைப்பால் மட்டும் முடியாது. அனைவரும் ஒன்றிணையவேண்டும். இதுதான் சந்தர்ப்பம்....."

அவருடைய உரையின்படி போதைக்கு எதிரான போராட்டத்தை முழு நாட்டுக்கும் உரியதாக அவர் வர்ணிக்கிறார். அதாவது தமிழ்ப் பகுதிகளையும் இணைத்து நாட்டை ஒரு முழு அலகாகக் கருதி அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ஆனால்,கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய கஜேந்திரகுமார் தமிழ்ப் பகுதிகளில் உள்ள வேறு ஒரு யதார்த்தத்தைச் சுட்டிக்காட்டினார். அரசாங்கம் வடக்கில் விதைத்ததை தெற்கில் அறுவடை செய்கிறது என்ற பொருள்பட அவர் உரையாற்றினார். அதாவது தமிழ் மக்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையை ஊக்குவித்து, போதைப்பொருள் வலையமைப்பை உருவாக்கி, தமிழ் மக்களைப் போதையில் மிதக்க விடுவது என்பது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் ஒரு நிகழ்ச்சிநிரல் என்று கஜேந்திரகுமார் உட்பட பெரும்பாலான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கடந்த 16 ஆண்டுகளாகக் கூறிவருகிறார்கள்.

2009 க்குப்பின் தமிழ் இளையோர் இலட்சியவாதத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு திரளாக மாறுவதைத் தடுப்பதற்கு அவர்களைப் போதையால் திசைதிருப்பி போதையில் மூழ்கடிப்பதே அந்த அரசியல் நிகழ்ச்சி நிரல் ஆகும். அதன்மூலம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் இனிமேலும் தலையெடுக்க முடியாதபடிக்கு அரசியல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தோற்கடிக்கப்படும். அந்த அடிப்படையில் பார்த்தால் வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் வலையமைப்பு எனப்படுவது ஒரு வகையில் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் இன்விசிபிள் யுத்தத்தின்- கட்புலனாகா யுத்தத்தின் ஒரு பகுதி தான்.

கஜேந்திரகுமார் அதனைத் தனது நாடாளுமன்ற உரையிலும் பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணல்களிலும் தெரிவித்திருக்கிறார். ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கூறியதாக ஒரு தகவலை அவர் சுட்டிக்காட்டுகிறார். பெருமளவு போதைப்பொருள்கள் வடக்கு-கிழக்குக் கடல் வழியாகவே நாட்டுக்குள் வருவதாக அந்த மேஜர் ஜெனரல் கூறியிருக்கிறார்.

ஆனால் வடக்கு- கிழக்கின் நீண்ட கடல் எல்லைகளை முழுக்க முழுக்க ஸ்ரீலங்கா கடற்படை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. அப்படியிருக்க அவர்களை மீறி எப்படிப் போதைப்பொருள் உள்ளே வருகிறது? அது போலவே போதைப்பொருள் குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களை மக்கள் பொலிஸாருக்கு வழங்கும்பொழுது அந்தத்தகவல் உடனடியாகவே குற்றவாளிகளுக்குச் சென்றுவிடுகிறது. கைதுசெய்யப்படுகின்ற குற்றவாளிகள் பின்னர் விடுவிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தமிழ்ப் பகுதிகளில் நடக்கின்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. முன்னாள் வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ்,இந்நாள் ஆளுநர் வேதநாயகன் போன்றவர்கள் அதைக் குறித்து ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அண்மையில் மாற்றம் அறக்கட்டளை நடத்திய ஒரு நூல் வெளியீட்டு விழாவிலும் ஆளுநர் வேதநாயகன் அதைச் சுட்டிக்காட்டி பேசியிருந்தார். மாற்றம் அறக்கட்டளை எனப்படுவது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு அரசு சாராத போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் ஆகும். நீங்கள் வடக்கு-கிழக்கில் விதைத்தவற்றைத்தான் தெற்கில் அறுவடை செய்கின்றீர்கள் என்ற பொருள்பட கஜேந்திரகுமார் கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அதைத்தான் முகநூலில் ஒரு மருத்துவர் எழுதினார் "வினை விதைத்தவன் வினையை அறுக்கிறான்" என்று.

எனவே தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அரசாங்கத்தின் ஆளுநர்கள், போதையில் மூழ்கிய நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவர்கள், ஊடகவியலாளர்கள்...போன்றவர்கள் தரும் தகவல்களின்படி தமிழ்ப்பகுதிகளில் போதைப் பொருள் வலையமைப்பு எனப்படுவது கட்டமைப்புசார் இன அழிப்பின் ஒரு பகுதிதான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இன்விசிபிள் போர்.

> தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அரசாங்கத்தின் ஆளுநர்கள், போதையில் மூழ்கிய நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவர்கள், ஊடகவியலாளர்கள்...போன்றவர்கள் தரும் தகவல்களின்படி தமிழ்ப்பகுதிகளில் போதைப்பொருள் வலையமைப்பு எனப்படுவது கட்டமைப்புசார் இன அழிப்பின் ஒரு பகுதிதான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இன்விசிபிள் போர்.


இந்தப் போரை அநுரவால் முடிவுக்கு கொண்டுவர முடியுமா? எந்தப் படைக் கட்டமைப்பையும் பொலிஸ் கட்டமைப்பையும் வைத்துக்கொண்டு தெற்கில் அவர் போதையை ஒழிக்கப்போவதாக கூறுகிறாரோ,அதே கட்டமைப்புகள்தான் தமிழ்ப் பகுதிகளில் போதைப்பொருள் வலையமைப்பைப் பேணுகின்றன என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே முழுநாட்டையும் இந்த விடயத்தில் ஓர் அலகாகக் கருதி தெற்கில் போதை வலைப்பின்னலை முறியடிப்பது போல வடக்கிலும் அதை முறியடிக்க முடியுமா?

08



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் பலவீனமும் அரசாங்கத்தின் அணுகுமுறையும்



அ.நிக்ஸன்

> தமிழ்த் தேசியக் கட்சிகள் தவிர்ந்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள் போன்றவர்களை அழைத்து இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச விரும்புவதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

அநுர அரசாங்கத்துக்கு எதிராக கருத்திட்டு வரும் பிரதான எதிர்க்கட்சிகள் பலவீனம் அடைந்துள்ளன. எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பு நுகேகொட நகரில் நடைபெற வுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பங்கெடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அறிவித்திருந்தார்.

அதேபோன்று குமார் குணரட்ணம் தலைமையிலான போராட்ட முன்னணியும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொள்ள முடியாது என்றும், இலங்கைத்தீவை ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்களுக்கு உள்ளாக்கிய முன்னாள் ஆட்சியாளர்களுடன் இணைந்து பயணிக்கமுடியாது என்றும் போராட்ட முன்னணி விவரமாகக் கூறியுள்ளது.

2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் தயாரிக்கப்பட்ட ஏக்கிய இராச்சிய என்ற புதிய அரசியல் யாப்பு மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதா இல்லையா என்ற இரு வகையான அணுகுமுறைகளுடன் அநுர அரசாங்கம் புதிய வியூகம் ஒன்றை வகுத்து வரும் நிலையில், எதிர்க்கட்சிகள் தமது பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஆனாலும் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய விடயத்தில் எதிர்க்கட்சிகள் ஏறத்தாழ அநுர அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகும் தன்மை உண்டு.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிகள் கடந்த வாரம் முதல் கோர ஆரம்பித்துள்ளன. ஆனாலும் இந்தக் கோரிக்கை பலமானதாக இல்லை. தமிழ்த் தேசியக் கட்சிகளை தம்பக்கம் எடுக்கக்கூடிய முறையில் சும்மா ஒப்பாசாரத்துக்காக விடுக்கப்படு கின்ற கோரிக்கையாகவே உள்ளது.

இந்தப்பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான மையமாக விளங்கும் ஜே.வி.பி. கொழும்பில் தொடராக நடத்திய உரையாடலில், மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவெடுத்திருப்பதாக அறியமுடிகிறது.


தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டம் மூலமாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்துமாறு கோரினாலும், கொழும்பை மையமாக் கொண்ட, எதிர்த்தரப்பு சிங்கள அரசியல் கட்சிகள் அதற்குப் பெரிய அளவில் ஆதரவு வழங்கும் சாத்தியம் இல்லை என்ற தொனியிலும் ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்களின் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் யாப்பின் ஊடாகவே இனப்பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காண முடியும் என ஜே.பி.வி.யின் இந்த விசேட கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

அநுர அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான செயற்பாடுகள் குறித்து ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள், குறிப்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத தேசிய சபை உறுப்பினர்கள் தீவிரமாக பரீசிலித்து வரும் அதேநேரம், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றிப் பெரிய அளவில் அச்சம் கொண்டதாகக் கூற முடியாது. ஆனால் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாமல் மேலும் ஒத்திவைப்பது குறித்தே அதிகளில் அவர்கள் சிந்திக்கின்றனர்.

இந்த விவகாரங்கள் உள்ளிட்ட ஒரு வருட ஆட்சியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், எதிர்கொண்ட சவால்கள், எதிர்காலத்தில் நகர்த்தவுள்ள அரசியல் வியூகங்கள் பற்றி ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையில் தேசிய சபை உறுப்பினர்கள் மிகத் தீவிரமாக உரையாடுகின்றனர். அதேநேரம், தமிழ்த்தேசியக் கட்சிகள், குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தின் போது 'வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளமை சிங்கள பௌத்த மயமாக்கல்கள்' என்று பேசியிருந்ததை ஏற்க முடியாது எனக் கூறிய நிஹால் அபேசிங்க, 'கஜேந்திரகுமார் அந்தச் சந்திப்பில் யதார்த்தமாக பேசவில்லை' எனக் குற்றம் சுமத்தியி ருந்





தமை பற்றியும் ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்திருக்கின்றனர்.

நேற்றுச் சனிக்கிழமையும் இதுபற்றி ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள் விவாதித்திருக்கின்றனர்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் தவிர்ந்த வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள் போன்றவர்களை அழைத்து இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச விரும்புவதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம் கடந்த செப்ரெம்பரில் சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற உரையாடலின் தொடர்ச்சியாக மற்றொரு உரையாடலை நடத்தி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம், தமிழர் பிரதிநிதிகள் என்ற ஒரு கட்டமைப்பை உருவாக்கும் திட்டமும் இருப்பதாக அறிய முடிகிறது. இத் திட்டத்தை தமிழ் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக உருவாக்க தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆராய்கின்றனர். ஆனாலும் சுவிட்ஸர்லாந்தில் நடந்த உரையாடலில் பங்குபற்றிய தமிழ்த்தரப்பின் கருத்துகளுடன் ஒத்துப்போக முடியாது என ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள் தெளிவாகக் கூறியுள்ள னர். இதன்காரணமாக மற்றொரு சந்திப்புக்கு அதாவது விரிவான உரையாடலுக்கு அநுர அரசாங்கம் இணங்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாகக் கூற முடியாது. ஆனாலும், மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், புதிய யாப்பும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி நாடாளுமன்ற ஆட்சி முறையை கொண்டு வரும் ஏற்பாடும் அடுத்த ஆண்டு சூடு பிடிக்கும் என உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் கொழும்பில் நடைபெறவுள்ள எதிர்க்கட்சிகளின் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் வெற்றியளிக்காமல் பிசுபிசுக்குமானால், அநுர அரசாங்கத்தின் மேற்படி இரண்டு அணுகுமுறைகளும் 2026 ஆம் ஆண்டு வெற்றியளிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன.

குறிப்பாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாமல் புதிய யாப்பு அதாவது ஏக்கிய இராச்சிய என்ற பழையகதையே நீடித்துச் செல்லக் கூடிய சூழலும், அதன் மூலம் தமிழரசுக் கட்சி தமது செல்வாக்கை நிலை நிறுத்தக் கூடிய ஆபத்தும் உண்டு.

புதிய யாப்பு விவகாரம் குறித்து தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுடன் தொடர்பில் இருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன. அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பு, சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை என்றெல்லாம் தமிழர்தரப்பு பேசிவருவதை தடுக்கும் திட்டங்களுக்காக வடக்கு- கிழக்கில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்கள் மூலம் காய் நகர்த்தப்பட்டு வருகிறது.

ஐ.நா. மனித உரிமை சபையின் தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்றி வருவதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவரைச் சந்தித்துத் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி சார்பில் வடக்கு- கிழக்கில் எட்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாகவும், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் செல்வாக்கு இழந்து வருவதாகவும் இலங்கை வெளியுறவு அமைச்சு கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களுக்கு விளக்கம் கொடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்கு ஈஸ்டர் அண்ணனுக்கு கெப்பிட்டிக்கொலாவ!

துவான் எம்.அசீஸ்



மி மிலேச்சத்தனமான யுகமொன்றினை நிர்மாணித்தவர்கள் இப்போது புத்தரைப்போல் கதைக்க ஆரம்பித்துள்ளனர். நாங்கள் மக்கள் மயமான யுகமொன்றைக் கடந்துவரவில்லை. மிலேச்சத்தனமான யுகமொன்றையே கடந்து வந்துள்ளோம். அந்த யுகத்தின் புள்ளிவிவரங்கள் தற்போது எங்களுக்குக் கிடைத்த வண்ணமுள்ளன. ஒரு சிலர் பஸ் வண்டிகளில் குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர், ஆட்சியாளர்கள் அறிந்திருந்த வகையில். குண்டுவெடித்ததன் பின்னர் அந்த இடத்துக்குச் சென்று அதனைப்பார்த்து கண்ணீர்விட்டுக் கதறியழுதிருக்கிறார்கள். அத்தகைய விடயங்கள் பற்றிய அறிக்கைகள் இன்னும் சில நாள்களில் வெளியில் வரும். சானி அபேசேகர மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார் என அதிகமாகக் கத்துகின்றவர்கள் குற்றங்களைச் செய்தவர்களே ...."

சில மாதங்களுக்கு முன்பு, பொலநறுவையில் இடம்பெற்ற குறைந்த வருமானமுள்ள சில குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன் வசதிகளை வழங்கிய ஒரு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வீடமைப்புப் பிரதி அமைச்சர் டி.பீ. சரத்குமார மேற்கண்டவாறு கூறியிருந்தார். இவரது இந்தக் கூற்றானது அந்தளவுக்குப் பாரதூரமானது என இந்நாட்டு ஊடகங்கள் அவதானத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. பிரதி அமைச்சரின் கூற்றில் மறைந்திருக்கின்ற தகவல்கள் குறித்து எவரும் இதுவரையில் கேள்விகளை எழுப்பவும் இல்லை.

உண்மையிலேயே கடந்தகாலத்தில் இந்த நாட்டில் ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கென சதி ரீதியில் மேற்கொள்ளப்பட்ட, இந்த பூமியே தாங்கிக்கொள்ளாத வகையிலான மிலேச்சத்தனமான குற்றங்கள் பற்றியே பிரதி அமைச்சர் இங்கு கூறியிருக்கிறார்.

பிரதி அமைச்சர் தனது உரையில் 'ஆட்சியாளர்கள் அறிந்திருந்த நிலையில் ஒரு சிலர் பஸ் வண்டிகளில் குண்டுகளை வெடிக்கச்செய்துள்ளனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும் அந்த ஆட்சியாளர் யார்? என்று இந்த உண்மைகள் விரைவில் வெளிவரும் எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிடுகின்றார். தற்போது பிள்ளையான் இரகசியப் பொலிஸாரின் தடுப்பில் இருந்து வருகிறார். எனவே பிரதி அமைச்சரின் கூற்றில் மறைந்திருப்பது பிள்ளையானிடம் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளில் வெளிவந்த தகவல்களாகவும் இருக்கலாம்.

இலங்கையில் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி கெப்பிட்டிக்கொலாவ எனும் பகுதியில் பேருந்து ஒன்றின்மீது கிளைமோர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது . இதனால் முழுநாடுமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது. இந்தத் தாக்குதல் காரணமாகத் தென்பகுதி சிங்கள மக்களின் வீரராக மாறினார் மஹிந்த ராஜபக்ச. அந்தச் சம்பவம் நடந்த இடத்துக்கு அந்த நிமிடமே சென்றிருந்தமைதான் இப்படிச் சிங்கள மக்களின் ஆதர்சநாயகராக அவர் கொண்டாடப்பட்டமைக்கு பிரதான காரணம்.

மேற்படி குண்டுத்தாக்குதலினால் இறந்த தமது உறவுகளின் உடல்களினருகில் அழுது, ஒப்பாரி வைத்த மக்களின் துயரில் பங்கேற்ற மஹிந்த ராஜபக்ச , 'இதற்குக் காரணமான புலிகளைக் கூண்டோடு அழிப்பேன்' எனவும் அங்கு சூளுரைத்தார். ஏறக்குறைய இதேபோன்றுதான் ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதும், அதன்போது நாட்டை மீளவும் பலமுள்ளதாக மாற்றுவேன் என கோத்தாபய சூளுரைத்தமையும் உங்கள் நினைவில் ஆடலாம்.

கெப்பிட்டிக்கொலாவ துன்பத்தின் அழுகுரல்களுடன் மஹிந்த ராஜபக்சவினது வீரமும் சிங்கள பௌத்த சமூகத்தினுள் மிக வேகமாக உச்சநிலைக்கு ஏறியது. அவருக்கு சவால்விட எவருமே இல்லை என்ற நிலை உருவாகியது. ஆனால் இந்தக் கிளைமோர் தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் உரிமைகோரவில்லை.

இதன் காரணமாக யுத்த ஆய்வாளர்கள் மத்தியில் மேற்படி மிலேச்சத்தனமான சம்பவம் தொடர்பில் சந்தேகங்கள் ஏற்பட்டன. என்றாலும், அவர்கள் அனைவருமே அந்த சந்தேகங்களை அடிமனதில் மறைத்துக்கொண்டே இருந்தனர். அப்போதைய நிலையில் ராஜபக்சகளுக்கு எதிரான இராணுவத்தினர்கூட காணாமற்போகும் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். மரணச்சான்றிதழும் அற்ற மரணங்களுக்கு அவர்கள் ஆளாகினார்கள். அவர்களது கை, கால்கள் முறிக்கப்பட்டன. அப்படியும் இல்லையேல் நாட்டைவிட்டு அவர்கள் தப்பியோடினார்கள். சிங்கள பௌத்த சமூகத்தினுள் ராஜபக்சகளுக்கு எதிரான அனைவருமே புலிகள் என முத்திரை குத்தப்பட்டனர்.

கெப்பிட்டிக்கொலாவ கிளைமோர் தாக்குதல் பற்றி இராணுவத்தினர் பலரிடம் அப்போது பெரும் சந்தேகம் இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தினால், தாம் உயிருடன் இருப்பதே சந்தேகமாகிவிடும் என்பதால் அவர்கள் தமக்கு நெருக்கமானவர்களுடன் மட்டுமே அந்தச் சந்தேகத்தைப் பகிர்ந்துகொண்டார்கள்.

அவர்களின் முதல் சந்தேகமே. "கிளைமோர் வெடித்த ஓரிரு நிமிடங்களில் எப்படி மஹிந்த அந்த இடத்துக்கு நேரடியாகச் சென்றார்?" என்பதே. என்னதான் மிக அவசரமாகக் ஹெலியில் புறப்பட்டாலும், குறைந்தது ஒரு மணித்தியாலமாவது தேவைப்படும். ஆனால் ஓரிரு நிமிடங்களில் கெப்பிட்டிக்கொலாவவுக்கு மஹிந்த வந்துவிட்டார். அதெப்படிச் சாத்தியம் என்று இராணுவ அதிகாரிகள் தமக்குள் பேசிக்கொண்டார்கள். பின்னர் விமானப்படையினர் சொன்ன சில தகவல்கள் அந்த இராணுவ அதிகாரிகளின் சந்தேகத்தை இன்னும் அதிகமாக்கியது.

அன்று எங்கே செல்கிறார் என்று தெரியாமலேதான் ஹெலிஹொப்டரை விமானி ஓட்டினார். பின்னர் கெப்பிட்டிக்கொலாவப் பகுதிக்குச் செல்லுமாறு உத்தரவு வந்தது. ஆனாலும் அந்தப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் சென்றவுடன், உடனடியாகத் தரையிறங்காமல் சிறிதுநேரம் வானத்தில் வட்டமடித்துக்கொண்டிருக்குமாறு விமானிக்குப் பணிக்கப்பட்டது.

சற்றுநேரத்தில் ஒரு வெடிப்புச் சத்தம் கேட்டது. அதன் பின்னரே ஹெலி தரையிறங்கியது'என்று விமானியுடன் [illegible] இராணுவ அதிகாரிகள் [illegible] இரகசியமாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனாலும், எப்படியோ இந்தத் தகவல் கசிந்து அப்போதைய ஆங்கில ஊடகங்களில் வெளிவந்துவிட்டது.

மஹிந்த மட்டும் தாக்குதல் நடந்த இடத்துக்குப் போயிருக்கவில்லை. அவருடன் ஒரு இராணுவப்படையணியும் சமநேரத்தில் அங்கு வந்து சேர்ந்திருந்தது. படையினருக்கும், மஹிந்தவுக்கும் எப்படி அங்கு குண்டுவெடிக்கப் போவது முன்பே தெரியும்? என்ற கேள்வி அப்போது எழுந்தாலும், அதை வெளிக்காட்டும் சூழல் அன்றைய காலகட்டத்தில் இருக்கவில்லை.

ஆனால், மேற்படி தாக்குதல் இடம்பெற்றிருந்த சமயம் பிள்ளையான் போன்றவர்கள் ராஜபக்சவின் மடியிலேயே இருந்தனர் . தம்பிக்கு ஈஸ்டர் போல அண்ணனுக்கு கெப்பிட்டிக்கொலாவ அமைந்துவிட்டதோ என்னவோ? ■



இலங்கையில் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி கெப்பிட்டிக்கொலாவ எனும் பகுதியில் பேருந்து ஒன்றின்மீது கிளைமோர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது . இதனால் முழுநாடுமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது. இந்தத் தாக்குதல் காரணமாகத் தென்பகுதி சிங்கள மக்களின் வீரராக மாறினார் மஹிந்த ராஜபக்ச. அந்தச் சம்பவம் நடந்த இடத்துக்கு அந்த நிமிடமே சென்றிருந்தமைதான் இப்படிச் சிங்கள மக்களின் ஆதர்சநாயகராக அவர் கொண்டாடப்பட்டமைக்கு பிரதான காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழமொழிகளில் பொதிந்திருக்கும் ஆணாதிக்கமும், பெண் அடிமைத்தனமும்

நவரத்தினம் கர்ணி

தமிழரின் சமூக வாழ்வியலில் பழமொழிகள் பழமையான பண்பாட்டு வடிவமாகும் . அவை வாய்மொழி மரபாக தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு மக்களின் வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள் போன்றவற்றை பிரதிபலிப்பவையாக காணப்படுகின்றன. அந்த வகையில் சமுதாயத்தில் நம் முன்னோர்களால் கூறப்பட்டு வந்த பழமொழிகளின் ஊடாக பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணாதிக்கமும் பெண் அடிமைத்துவமும் பிரதிபலிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அவை சமூகத்தில் பெரும்பாலும் எதிர்மறையான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளன.

பெண்களின் பலவீனங்களையும் குணாதிசயங்களையும் குடும்பத்தில் அவர்களுடைய பங்கு பற்றியும் பழமொழிகள் குறிப்பிடுகின்றன. தமிழர் வாழ்வில் பெண்கள் குடும்பச் சூழலின் அங்கமாக மட்டுமல்லாமல் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றின் உயிர்நாடியாக விளங்குகின்றார்கள். ஆனால் பெண்ணானவள் ஒரு அடக்குமுறையின் கீழ் தான் வாழ வேண்டும் என்பதனைப் பழமொழிகள் சுட்டிக்காட்டுகின்றன. பெண்கள் பழமொழிகளை அடுத்த தலைமுறைக்கு கூறுவதிலும் பரப்புவதிலும் மிக முக்கியமானவர்களாக காணப்படுகின்றார்கள். ஆனால் இவர்கள் கூறும் பழமொழிகள் பெரும்பாலும் ஆணாதிக்கக் கருத்துகளையே பிரதிபலிக்கின்றன. இருப்பினும் சில பழமொழிகள் பெண்களைப் பாராட்டுகின்றன.

பெண் என்பவள் தாயாகவும் மனைவியாகவும் மகளாகவும் மருமகளாகவும் பல்வேறு வடிவங்களை பெற்று வருகின்றாள். பழமொழிகள் சமூக வாழ்க்கையை பிரதிபலிக்கும் கண்ணாடி என்று கூறலாம். ஏனென்றால் பெண், ஆண் இருவரின் குடும்ப வாழ்க்கையில் பெண் என்பவள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பார்வை பழமொழிகள் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. பால் நிலை சார்ந்த வேறுபாடுகளை பழமொழிகள் மிகத் தெளிவாக காட்டுகின்றன.

ஆண்களின் ஆளுமை, வீரியம், அறிவாற்றல் என்பவற்றை வலியுறுத்துவதோடு பெண்கள் பற்றிய சமூக கற்பனைகள், கட்டுப்பாடுகள் மற்றும் எதிர்மறை கருத்துக்கள் என்பவற்றையும் வெளிப்படுத்துகின்றன.

அந்த வகையில் பழமொழிகளில் பெண்களை விட ஆண்கள் வலிமை மிகுந்தவர்களாகவும் ஆண்களுக்கு பெண்கள் கட்டுப்பட்டு தான் வாழ வேண்டும் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில்"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் " எனும் பழமொழி கணவன் என்ன தவறு செய்தாலும் மனைவி அதனைப் பொறுத்துக்கொண்டு அவனே தஞ்சம் என வாழ வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

"அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு", "சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை வேணும்", "ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாய் பிறந்தால் எருமை" இப் பழமொழிகள் மூலம் ஆண் தான் சிறந்தவன் ஒரு குடும்பத்தில் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருக்க வேண்டும் பெண் குழந்தை அங்கு இரண்டாம் பட்சமாக பார்க்கும் நிலை காணப்படுகிறது. பழமொழிகள் பெண்மையைப் போற்றுவதையும் பிரதிபலித்து நிற்கின்றன.

அந்த வகையில் "பத்தினி சாபம் பாரை அழிக்கும்" இந்தப் பழமொழி பெண்ணின் மதிப்பையும் கற்பின் மகத்துவத்தையும் பறைசாற்றுவதாக அமைகின்றது.

"தாயிற் சிறந்த கோயில் இல்லை" இங்கு தாயானவள் கடவுளுக்கு நிகராக காட்டப்படுகின்றாள். அதேசமயத்தில் பெண்களை சமூகக்கட்டுப்பாடுகளின் பெயரால், அடக்கி ஒடுக்கும் கைங்கரியத்தையும் பழமொழிகள் செய்கின்றன. " அடக்கமே பெண்ணுக்கு அழகு" , "பெண் புத்தி பின் புத்தி" , "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு", "அரசனை நம்பி புருஷனை கைவிட்டாளாம்", "ஆடத் தெரியாத ஆட்டக்காரி மேடை கோணல் என்றாளாம்"இவ்வாறான பழமொழிகள் பெண்ணை குறைத்து அவளை ஏளனமாகப் பேசுகின்றன. "ஓடுகாலி வீடு மறந்தாளாம்"எனும் பழமொழியில் ஓடுகாலி என்பது பெண்ணை இழிவாக கூறும் சொல்லாகும். பெண் என்பவள் சுதந்திரமாக, தானாகவே ஒரு முடிவை எடுக்காமல் எப்போதும் வீட்டினுள் தான் இருக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது.

"கொண்டு வந்தால் மகராசி இல்லாவிட்டால் பரதேசி"எனும் பழமொழி திருமணமாகி புகுந்த வீடு செல்லும் பெண் தனது வீட்டிலிருந்து சீதனம் கொண்டு சென்றால் அங்கு அவள் மதிக்கப்படுவாள் என்பதையும் அவ்வாறு இல்லை என்றால் அவள் அங்கு துன்பத்தை அனுபவிப்பாள் என்பதையும் சொல்கின்றது.

"பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்தில் ஏறித்தான் ஆக வேண்டும்" இது பெண்களின் பிடிவாத குணத்தை காட்டுவதாக அமைகின்றது. இப் பழமொழிகளில் பெண்களை அறிவிலி, பொறுப்பற்றவள், வஞ்சகி என வசைபாடல்களும் நிறைந்திருக்கின்றன. பழமொழிகள் எப்போது, எங்கே ,யாரால் சொல்லப்படுகின்றன என்பது அவரின் ஆளுமை வெளிப்பாடு மற்றும் சூழ்நிலை சார்ந்து பயன்பாட்டை தீர்மானிக்கின்றது. பழமொழிகள் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு அர்த்தங்களைப் பெற்று வருகின்றன. யார் சொல்கிறார்கள்? யாருக்கு சொல்கிறார்கள் எந்த சூழலில் சொல்லுகிறார்கள் என்பதன்மூலம் பழமொழியின் தாக்கம் மாறுகின்றது. அந்த வகையில் பழமொழிகளின் உள்ளடக்கங்களின் வாயிலாக அவற்றினை அறிய முடிகின்றது.

"பொம்பள சிரிச்சா போச்சு புகையில விரிச்சா போச்சு" எனும் பழமொழி மூலம் பெண்ணானவள் குனிந்த தலை நிமிராமல் வாழ்க்கை முழுவதும் வாழ வேண்டும், அடக்கம் அவளது உயிர் மூச்சாக இருக்க வேண்டும் என்றும் சிரிப்பு என்பது அவளிடம் இருக்கவே கூடாது என்றும் ஆணாதிக்கச்சிந்தனையாக வெளிப்படுகின்றது.

இதற்கு மாறாக, "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" எனும் பழமொழி பெண்களின் சக்தியை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றதது. உலகில் பெண்ணொருத்தி மட்டுமே இன்னொரு உயிரை உலகுக்கு கொண்டுவர முடியும் அந்தப் பெண்ணாலே அழிக்கவும் முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

"நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை" என்ற பழமொழியின் வாயிலாக பெண்ணொருத்தியின் குணத்தை அவளின் தாயின் குணத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடியும். இதனால்தான் முற்காலத்தில் பெண்களைப் பார்க்கச் செல்லும் போது முதலில் அவளின் தாயார் பற்றி விசாரிக்கும் வழக்கம் இருந்தது.

இவ்வாறாக பழமொழிகளின்மூலம் ஆணாதிக்கமும் பெண் அடிமைத்தனமும் அதிகம் வெளிப்படுவதைக் காண முடிகின்றது. ஆனால் இன்றைய சமுதாயத்தில் பெண்கள் பல துறைகளில் முன்னேறினாலும், ஆணாதிக்கத்தை அடிக்கடி எதிர்கொள்கின்றனர்.

பெண்களும் ஆண்களுக்குரிய சம உரிமையுடன் வாழ ஒரு சமதர்மமான சமூகக் கட்டமைப்பு அவசியம். அப்போது இந்தப் பழமொழிகளின் பார்வையும், பயன்பாடும் மாற்றமுறும் என நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

நெல்லை க.பேரன் தனது கதையொன்றினை யாராவது பாராட்டியதாக அறிந்தால் சிரமத்தைப் பாராமல், பாராட்டியவர் வீட்டுக்கே சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனது படைப்பினைப் பாராட்டியதை உறுதிப்படுத்திக்கொண்டு நன்றி தெரிவித்துவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகச் சண்முகன் சொல்லியிருக்கிறார். நெல்லை க.பேரனிட்ட இன்னொரு தன்மையுமிருந்தது. அவரின்ரை கதையளைப் பற்றி எழுத்தில வாற விசயங்களைத் தவிர அவரை நேரில சந்திக்கிறவை கதையளைப் பற்றிச் சொல்லுற விசயங்களையெல்லாம் எழுத்தில பதிவு செய்து வைச்சிடுவார்.

நீங்கள் அவரின்ரை "சத்தியங்கள்" சிறுகதைத் தொகுப்பை வாசிச்சிருந்தால் நான் சொல்லுறது உங்களுக்குக் கிளியறா விளங்கும். அதிலை கடைசிப்பக்கத்தில சில பதிவுகள் இடம்பெற்றிருக்கும். அதிலை எக்ஸாம்பிளுக்கு ஒண்டைக் குறிப்பிடுறன். "ஈழநாட்டில் உமது கதை வாசித்தேன். வித்தியாசமாயிருந்தது."

குப்பிழான் ஐ.சண்முகன்(அறிவோர் கூடல் நிகழ்வில் சந்தித்தபோது நேரடியாகக் கூறப்பட்டது) இந்தக் 'கற்றக்கறி'யிலதான் மற்றப் பதிவுகளுமிருந்தது. இதுவொரு நல்ல விசயமெண்டு நான் நினைக்கிறன். உள்ளதை உள்ளபடி பதிவு செய்யுறதுக்கு எப்பவும் ஒரு பெரிய கலைப்பெறுமதியிருக்குது எண்டது உண்மை. உதொரு பெரிய விசயமில்லை எழுதிவைக்கிறதுக்கு எண்டு மிதப்பிலை திரிஞ்சால் அந்தக் கலைப்பெறுமதி விளங்காது. தெரிஞ்சோ தெரியாமலோ நெல்லை க.பேரன் அதைச் செய்திருக்கிறார். என்ன நடந்தாலும் அதை எழுத்தில போட்டால் எப்பவும் அதுக்கொரு பெரிய பெறுமதியிருக்கு. நாங்களதைப் பொருட்படுத்திறேல்ல எண்டு குப்பிழான் ஐ.சண்முகனும் அடிக்கடி சொல்லுவார்.

52

சண்முகன் நெல்லை க.பேரனைப் பற்றி என்னோட கதைச்சது 2000 களிலதான். ஆனால் 1990 களிலையே அவரைப் பற்றி எனக்குச் சொன்னது குமுதினி ரீச்சர்தான். அவவை அந்தக் காலகட்டத்தில ஒரு புதுமைப்பெண் எண்டுதான் சொல்லவேணும். அப்ப பொதுவாய் ' ஏ.எல்' ரியூட்டறியளில ஆம்பிளையள் தான் படிப்பிப்பினம். பொம்பிளையள் படிப்பிக்கிறேல்ல.

வடமராட்சி 'ஏ.எல்' ரியூட்டறி யளின்ரை வரலாற்றில முதன்முதலா ஒரு பொம்பிளைப் படிப்பிக்க வெளிக்கிட்டதெண்டால் அது குமுதினி ரீச்சர்தான். நான் ஊர்ப்புதினம் இரண்டாம் பாகத்தில லொஜிக் நவம் எண்ட நவம் மாஸ்ரறைப் பற்றி விலாவாரியா எழுதியிருந்தனான். அவர் அந்தக் காலகட்டத்தில நடத்தின பியுஸி எண்ட ரியூட்டறியிலதான் குமுதினி ரீச்சர் இந்து நாகரீகம் படிப்பிக்க வெளிக்கிட்டவா. அவா நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில (இப்ப நெல்லியடி மத்திய கல்லூரி) தான் ஆசிரிய நியமனம் கிடைச்சுப் படிப்பிச்சவா. இந்துநாகரீகம் மட்டுமில்லை தமிழ், இந்துசமயம் எல்லாம் வலுவிளக்கமா படிப்பிப்பா. நவீன இலக்கியத்திலயும் அவவுக்கு நல்ல ஈடுபாடு இருந்தது. "நெல்லை குமுதம்" எண்ட புனைபெயரில ஒரு நாவல் எழுதிக் கையெழுத்துப் பிரதியா வைச்சிருந்ததையும் நான் பார்த்திருக்கிறன்.

(தொடரும்)

# அறிந்தும் அறியாமலும்

எம்.ஐ.முபாறக்



## எதிரி என்றால் எதிரிதான்!

மஹிந்த ராஜபக்சவைச் சந்திப்பதற்கு சில நாள்களுக்கு முன்னர். முன்னாள் அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்தவும் அனுர பிரியதர்சன யாப்பாவும் தங்காலை கால்டன் இல்லத்துக்குச் சென்றிருக்கின்றனர்.

மூவரும் சேர்ந்து பழைய அரசியல் சம்பவங்களையெல்லாம் பேசினர். அப்போது சுசில் "சேர்…கோத்தாவின் ஆட்சிக்காலம்தான் மிகவும் அரசியல் தீர்மானமிக்க காலம்" என்றார்.

"ஓம் ..பெரிய பெரிய அரசியல் சதியெல்லாம் நடந்தது அந்த ஆட்சியிலதான்." என்றார் மஹிந்த பதிலுக்கு. மேலும் தொடர்ந்த சுசில் "அவருக்கு நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவரும் எனக்கு தீங்கொன்றும் செய்யவில்லை. இருந்தாலும், ஏனோ என்னைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது." என்றார் கவலையோடு.

"அது அவரின் பழக்கம். எந்தக் காரணமும் இல்லாம என்னோடேயே பல நாள்களுக்குப் பேசமாட்டார். எதிரி எண்டால் எதிரிதான், நண்பன் எண்டால் நண்பன்தான். விட்டுக்கொடுப்பெல்லாம் கோத்தாவிடம் கிடையாது. அதாலதான் அவரால் அரசியலிலே வெல்லமுடியவில்லை." என்றார் மஹிந்த மீண்டும்.

## மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?



கோத்தாபய ராஜபக்ச ஒருமாதிரியான ஆள். கடுமையானவர், ஒருவரை எதிரியாக பார்த்தால் என்றுமே எதிரியாகவே பார்ப்பார். நண்பனாகப் பார்த்தால் உயிர் நண்பனாகப் பார்ப்பார்.

அவர் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அவரது அமைச்சர்கள் - எம்.பி.க்களுடன் முகம் கொடுத்துக்கூடப் பேசமாட்டார். இதனால் பொது நிகழ்வுகளுக்கு அவர் சென்றால் அங்கிருக்கும் சில அமைச்சர்கள் அவரது கண்ணில் படாமல் மறைந்துகொள்வார்கள்.

இவர் அவர்களைக் கண்டு எப்படியும் பேசப்போவதில்லை. இதை மக்கள் பார்த்தால் அமைச்சர்களுக்கு அல்லவா வெட்கம். இதனால்தான் இப்படி மறைந்துகொள்வார்களாம். குறிப்பாக, அனுர பிரியதர்சன யாப்பா அவரது சொந்த மாவட்டமான குருநாகலுக்குக் கோத்தா சென்றால்கூட அவரின் கண்களிலும் மக்களின் கண்களிலும் படாமல் தூரம் சென்றுவிடுவாராம்.

## புத்தகங்களுக்காகப் போர்

சில நாள்களுக்கு முன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேசப் புத்தகக் கண்காட்சியைப் பார்ப்பதற்காக சென்றார் விமல் வீரவன்ஸ. முதலில் அங்கு நின்ற மக்களுடன் உரையாடினார். புத்தகம் அச்சிடுவதற்கான வற்வரி அதிகம். அதை நீக்குவதற்கான போராட்டத்துக்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும் என்று அங்கிருந்தவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்தாராம்.

அதற்கு அவர்களும் தலை அசைத்தனர்.

பின்னர் ஒவ்வொரு கூடாரத்துக்கும் சென்று புத்தகங்களை வாங்கினார்.

இவ்வாறு எல்லாக் கூடாரத்திலும் இருந்து மொத்தம் 30 புத்தகங்களை வாங்கினார். சில கூடாரங்களில் இருந்து அவருக்கு இலவசமாகவும் புத்தகங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு வருடமும் இந்தப் புத்தகக் கண்காட்சியில் விமல் தவறாமல் கலந்துகொண்டு புத்தகங்கள் வாங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆட்டையைப் போட்ட சொத்தில்லை

முன்னாள் அமைச்சர்களின் சொத்து விபரங்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் எம்.பி .வஜிர அபயவர்த்தனவின் பெயரும் அந்தப் பட்டியலில் இருப்பதாக ஓர் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதைப் பார்த்த அவரது நண்பர் ஒருவர் அவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து இந்தத் தகவலை அவருக்குக் கூறியுள்ளார்.

கொஞ்சம்கூட அலட்டிக்கொள்ளாத வஜிர "நான் 30 வருடங்களாக சொத்து விபரங்களை இவ்வாறு சமர்ப்பித்து வருகிறேன். அவை நான் களவெடுத்த சொத்துகள் அல்ல" என்று கூலாகக் கூறினாராம்.



## செல்பிப் பிள்ளை



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேசப் புத்தகக் கண்காட்சிக்கு நாமல் ராஜபக்சவும் சென்றிருந்தார்.

அவரைச் சுற்றிவளைத்துக்கொண்ட மக்கள் அவருடன் செல்பி எடுக்கத் தொடங்கினர். புத்தகம் வாங்குவதற்கு செலவழித்த நேரத்தை விட அவர் செல்பிக்காகத்தான் அதிக நேரத்தைச் செலவிட்டாராம். அடுத்த ஜனாதிபதிக் கனவில் இருப்பவர் அல்லவா அவர்.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பாவிக்கிறாராம். பின்னர் அவர் அவரது பிள்ளைகளுக்காகவும் மனைவிக்காகவும் சில புத்தகங்களை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

02 நவம்பர் 2025

# பதிப்பாசிரியர் குறிப்புகளால் பொலிவுறும் நாடக ஆக்கங்கள்:



○ கதிரேசு ரதிதரன்

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 11 நாடகங்களை உள்ளடக்கிப் பதிப்பாசிரியர் நா.நவராஜினால் ஜீவநதி வெளியீடாக பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட 5 நாடக நூல்களில் காணப்படுகின்ற சிறப்புப் பண்புகள் பற்றிய ஒரு கண்ணோட்டமாக இந்தக்கட்டுரை அமைகிறது. இந்நூல்களின் ஆசிரியரான பெருமதிப்பிற்குரிய சண்முகலிங்கம் தனது 93ஆவது வயதில் 17.01.2025 அன்று இயற்கை எய்தினார். அவரது நாடக நூல்கள் அடிக்குறிப்பிடப்பட்டமையால் எவ்வாறு மேலும் பொலிவுற்றன என்பது பற்றி பார்ப்பதற்கு முன்னர் 'குழந்தை சண்முகலிங்கம் என்றால் யார்? என்றும், ஏன் அவரது எழுத்துருக்கள், நாடகம்சார் ஆக்கங்களை நவராஜ் பதிப்பிக்கவேண்டும்? என்ற இரண்டு விடயங்களை முதலில் நோக்கலாம்.

குழந்தை ம.சண்முகலிங்கம் 1931.11.15 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்தவர். ஆசிரியராக, அதிபராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை தற்காலிக மற்றும் வருகை விரிவுரையாளராகக் கடமைபுரிந்தவர். தனது ஆரம்பக்கல்வியை போளவத்த றோமன் கத்தோலிக்கத் தமிழ் ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி போன்றவற்றிலும் பட்டப்படிப்பினை (1953 சித்திரை - 1957 சித்திரைவரை) இந்தியாவில் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் நாடக டிப்ளோமாவைக் (1976 - 1977) கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக்கொண்டவர். மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். அவர் சுயவாக்க மற்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் உள்ளடங்கலாக 200 வரையான நாடக எழுத்துருக்களை (நா.நவராஜின் அண்மைய பதிவின்படி) எழுதியுள்ளார். அத்தோடு நாடகம் ஒரு கற்கைநெறியாக வரவேண்டும் என்ற ஆரூடத்திலேயே 'நாடக அரங்கக் கல்லூரியை' (1978) ஆரம்பித்தவர். அதேபோல யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத்துறையின் 'நாடகமும் அரங்கக் கலைகளும்' பாடத்தினை தற்காலிக விரிவுரையாளராகவும், வருகை விரிவுரையாளராகவும் 1987 இல் இருந்து 2004 வரை கற்பித்த தருணங்களில் மாணவர்களுக்கு மேற்கத்தைய அரங்க வரலாற்றையும் போக்கையும் அறிமுகப்படுத்திய அதேவேளை அவர்கள் மேற்கத்தைய நாடக எழுத்துருக்களைக் கற்பதற்காக மொழிபெயர்ப்புகளையும் செய்ததோடு அக்காலங்களில் நாடகத்துறைசார்ந்து பல்வேறு விடயங்களையும் பேசுதற்குரிய செயற்பாட்டாளராகவும் புலமையாளராகவும் விளங்கினார். அத்தோடு சமூகத்தின் இருப்பையும் நெருக்கடிகளையும் பண்பாட்டுத் தளத்துக்குள் நின்றுகொண்டு சமூகத்தில் பார்ப்போருக்கு நெருக்கமான உறவோடு, தற்புதுமையான நாடகங்களை உருவாக்கினார். இவரது அரங்க ஆற்றுகைமுறையின் தொடர்ச்சியே பெருமளவில் இன்றுவரை புழக்கத்தில் உள்ளது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

1995 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இடப்பெயர்வுக்கு யாழ்ப்பாணம் தயாராக இருந்தவேளை, எனது பல்கலைக்கழக இறுதி வருட ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழந்தை சண்முகலிங்கத்தின் 81 நாடக எழுத்துருக்களைக் கடல்கடந்து வன்னிக்குக் கொண்டு செல்லவேண்டி இருந்தது. எனவே அவற்றுள் தண்ணீர் போகாதபடி பொலித்தீன் பையினால் சுற்றிக் கட்டி, அவர் முன்னர் பயன்படுத்திய அரச அலுவலகப் பையினுள் போட்டு அவற்றைக் கிளாலியால் மிகக்கவனமாக கொண்டுசென்று எனது கிராமமான ஸ்கந்தபுரத்தைச் சென்றடைந்தேன். இயற்கையின் நாடகத்தாலோ அல்லது கடவுளாலோ நான் கொண்டு சென்ற 81 எழுத்துருக்களைத் தவிர, இடப்பெயர்வு நடந்து முடிந்து மீள வீடு வந்தபோது சண்முகலிங்கத்தின் பல ஆவணங்கள் அவரது வீட்டு எலுமிச்சை


## குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ஐந்து நாடக நூல்கள்

மரத்தின் கீழே வீசப்பட்டு அழிந்தும் சேதமடைந்தும் காணப்பட்டன . நான் சண்முகலிங்கத்தின் எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு எனது தகவல் சேகரிப்பு வேலைகளை முடித்த பின்னர், 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு ஆட்கள் அனுமதிக்கப்பட்டபோது வன்னியிலிருந்து எழுத்துருக்களைக் கவனமாக எடுத்துக்கொண்டு திருகோணமலை ஊடாகக் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து குழந்தை சண்முகலிங்கத்திடம் கையளித்தேன். அவ்வாறு கையளித்த அவரது எழுத்துருக்களைப் பின்னர் நாடகம் போடுவதற்கு என்று வாங்கிச் சென்று அவற்றை தொலைத்தவர்கள் இருக்கிறார்கள். எழுத்துருக்களைத் திருப்பிக்கொடுக்காதவர்கள் இருக்கிறார்கள். அவற்றை வைத்து நாடகம் போட்டவர்கள் இருக்கிறார்கள். யாரிடம் அந்த எழுத்துருக்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் தெரியாமலே சிலர் மறைத்திருக்கிறார்கள், இன்னும் சிலர் மறைந்திருக்கிறார்கள். திருப்பிக் கொடுக்காதவர்களில் சிலர் இது தம்மிடம் தான் இருக்கின்றது

> “ குழந்தை ம.சண்முகலிங்கத்தின் படைப்புகளோடும் வெளியீடுகளோடும் தோன்றாத்துணையாக நின்று நா.நவராஜ் இயங்கி வந்தகாலங்களில் குழந்தை சண்முகலிங்கத்தின் கட்டளையின் பேரில் பல விடயங்களை இருவரும் இணைந்து மேற்கொண்டனர். அந்தச்செயற்பாட்டில் திருப்தியடைந்த குழந்தை சேர் தனது எழுத்துருக்களின் பதிப்பினை மேற்கொள்ளும் பணியினை அவரிடம் அளித்து அவரை ஆற்றுப்படுத்தி வந்தார்.


என்பதை நாகரிகமாக பின்னர் தெரியப்படுத்தியவர்களும் இருக்கிறார்கள். இதைப் பேசாதுவிடலாம்; ஆனால் இன்னுமொரு வரலாற்றுப் பேராளுமைக்கு இவ்விதம் நடக்கக்கூடாது என்பதற்காக இது பதிவுசெய்யப்படுகிறது. நாடக அரங்கக் கல்லூரியின் பதிவாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் சிரேஸ்ட பதிவாளருமாக இருந்த க.ஞானபாஸ்கரன், கிட்டத்தட்ட 2002 களின் பின்னர் சண்முகலிங்கத்தின் எழுத்துருக்களைத் தட்டச்சு செய்து பாதுகாக்கும் நல்ல நோக்கில் எடுத்துச் சென்று பல்கலைக்கழகத்தில் தனது அலுவலகத்தில் வைத்திருந்தார். யாராவது பாஸ்கரனிடம் சண்முகலிங்கத்தின் எழுத்துருக்களைப் பயன்படுத்தக் கேட்டால் எழுத்துருவைக் கொடுக்கும் போது அது இருந்த கோப்பின் உள்ளட்டையில் திகதியிட்டு பெறுபவரின் கையெழுத்தை வாங்கியே அதனை அவர்களிடம் ஒப்படைப்பார். அவர்கள் திருப்பி எழுத்துருவைக் கொடுக்கும்போது தந்த திகதியை இட்டு அவர்களது கையொப்பத்தினை இட்டு வைப்பார். மீண்டும் 2005 களின் பின்னர் குழந்தை ம.சண்முகலிங்கம், அவரிடமிருந்து எழுத்துருக்களை மீளப்பெற்றுத் தனது வீட்டில் வைத்திருந்தார். இக்காலங்களில் நா.நவராஜுடன் இணைந்து மாலை நேரங்களில் எழுத்துருக்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினர். அப்போது பாஸ்கரன் வைத்திருந்த சில கோப்புகளில் சிலவற்றில் கொடுத்த திகதியும், கையெழுத்தும் இருந்தன. மீளக் கையளித்த திகதியும் கையெழுத்தும் இல்லை. எழுத்துருவும் இல்லை. அந்தப்பெயர் கொண்டவர்களிடம் தொடர்புகொண்டு எழுத்துருக்களை மீளக் கேட்டபோது தம்மிடம் இல்லையெனக் கைவிரித்தனர்.


(அடுத்த வாரம் தொடரும்)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசுகி

35

## போரின் கவிதை

ஆனந்தி

போர்க்களம் உயிர்களைத் தின்றது,
பூமி சிவந்தது
இரத்தத்தின் வாசம் கொண்டு.
அவள் உயிர் அவனோடு சென்றது,
எஞ்சியிருப்பது எலும்புக்கூடு மட்டுமே!

வெறும் நினைவுகள் மட்டும்
சின்னஞ்சிறு ஓசை கொண்டு
இரவில் சலசலக்கின்றன....
வெளியில் வானம் அழுகின்றது
உள்ளே குழந்தைகள் பசியால்
அழுகின்றன....

எதை விற்றுக் காசாக்குவது?
வெறும் தரையில் விழுந்து கிடக்கும்
குழந்தைகளின் பசிக்கு
மானத்தை விற்க
மனம் முடிவு செய்கிறது.

வேதனை சுவாசமாக மாறி
சேறுகள் பூசிச் சிரிக்கிறது...
சுமந்து செல்வான் என்றவன்....
எங்கென்று தெரியாது
காத்திருந்து களைத்தாயிற்று
நெருப்பாய் கொதிக்கும்
வயிற்றின் பசிக்கு
நாள்கூலியின் காசு
போதாதென்கிறது விலையேற்றம்.

அப்பாவைக் கேட்கும் தருணங்களில்
ஏமாற்றப்பட்ட குழந்தைகள் முன்
இனி வராத வசந்த காலத்தை
சொல்லித் தீர்த்துவிட்டாள் அவள்.
நியாயமானதைவிட உயிரானதை
வாங்கி அனுபவிக்க
காசு கொடுக்கத் தயாராகிறார்கள்
மனிதர்கள்....

சுடும் சூரியன் சாட்சியாய் நிற்க,
அவள் உள்ளம் சாம்பலாய் கருகுகிறது.
போரின் வெற்றி யாருக்கு கிடைத்தது?
தோற்றுப்போனது அவள் மட்டுமே!

பசியோ ஒரு கொள்ளி எறும்பு
பிள்ளைகளின் வயிற்றைச்
சுற்றிக் கடிக்கிறது.
கையில் உணவு இல்லை
கணவன் எங்கோ தெரியவில்லை
மண்ணின்கீழ்
புதைக்கப்பட்டிருக்கலாம்.
வரும் வரை காத்திருந்து
கற்பைக் காப்பாற்றி என்ன இலாபம்?
உத்தமியாக இருந்தாலும்
உலகம் நம்பிவிடாது......

கண்ணீர் உப்பாகி கன்னத்தில்
வழிகிறது,
"அம்மா பசி என்ற சத்தம்
காற்றைத் துளைக்கிறது
காதுகள் களைத்தன...
சமூகம் தூரம் நின்று கற்கள் எறிகிறது,
ஆனால் அவளுக்குள் காயம் பட்ட
தாய்மையின் குரல் வலிக்கிறது.

பிள்ளைகள் வாழ்ந்தால் போதும்
ஒரு போரின் வெற்றிக்காக
காணாமற்போன போராளியின்
மனைவி
உயிரின் மதிப்பைச் சுமந்தவள்,
பசியை அடக்க வேறு வழி இல்லை
இருப்பவரிடம் இருந்து எடுப்பதற்கு
இதுதான் வழியென்றால் என்ன
செய்வது?

இளமை காத்திருந்து சலித்துவிட்டது
இது குற்றங்களுக்கான தண்டனையாக
இருந்துவிட்டுப்போகட்டும்.

ஒவ்வொரு இரவு முடிந்ததும்,
அவள் தலையை
வானம் நோக்கி உயர்த்துகிறாள்,
நீயே சாட்சியாக இரு
நான் தவறிழைத்தவள் அல்ல,
பசியால் இந்நிலைக்குத் தள்ளப்பட்ட
குழந்தைகளின் வலியேந்தும் ஒரு தாய்,
முன்னாள் போராளியின் மனைவி.

விலை உயர்கிறது
வானம் வரை தொடுகிறது,
ஊதியம் மண்ணில் தாழ்ந்தே
கிடக்கிறது
கிடைக்கும் உதவிகள்
இரு நாள்களுக்குக்கூட போதாது.

வீடு வீடாகத் திரிந்து பாத்திரங்கள்
கழுவி
அவள் கரங்கள் கடினமாய்
உடைகின்றன,
குழந்தைகளின் பசியோ
அடங்கவில்லை.

அரிசி தங்கமானது, பால் கனவானது,
சமையலறைப் புகை பசியின் நிழல்
ஆனது.
இருக்கும் பணம் ஒரு நாளைக்கும்
போதாது...
பழைய சிரிப்பு காணாமற்போனது.

சந்தையில் விலை எகிற,
மனதில் வலியும் ஏறுகிறது
போரின் செலவு முடிவில்
ஏழைகளின் வயிற்றைக் கிழிக்கிறது..
ஒரு வேளைச் சோற்றைக் கண்டு
குழந்தைகள் குதூகலிக்கின்றன...
ஆனால் அவளுக்கு மட்டுமே தெரியும்

அதற்காக கொடுத்த விலை!
போரின் சத்தம் முடிந்ததும்

குழந்தைகள் கத்துகின்றன
நாடு அமைதியாகவில்லை

பசிக்காகப் போராடும் நிலை வந்தது
போருக்குள் நுழையாதவன் தப்பிவிட
போராளிகளின் வாழ்வு..போரின் பின்பும்
போராட்டமானது....

மண்ணில் உணவு இல்லை,
மனதில் நம்பிக்கை இல்லை.
துப்பாக்கி ஒலிகள் ஓய்ந்தபின்
பசியோடு இருக்கும்
குழந்தைகளின் ஒலியும்
நோயாளிகளின் குரலும்
அகோரமாக அந்தரிக்கின்றன..

குழந்தையின் அழுகை
ஓய்ந்தபாடில்லை
அவன் வாங்கிப்போட்ட
பொன் வளையலை விற்றாள்,
பிள்ளைக்குக் கஞ்சி வாங்க.
மண்வாசம் கலந்த வீடுகள் சிதறின,
மண்ணில் மறைந்தன
அவளது கனவுகளும் உறவுகளும்.

போராளி வீடு திரும்பவில்லை,
பெயர் மட்டும் எங்கெல்லாமோ
பதிவு செய்யப்பட்டது.......
கூட்டங்களுக்கு விதவைகளை அழைத்தால்
வீட்டில் சோறு சமைப்பதெப்படி?
அவர்கள் தரும் கூட்டக்கூலி...
தேநீருக்கே போதாது.....

போர் முடிந்ததென பிரகடனம் செய்தார்கள்
ஏழ்மை கிருமியாக பரவிக்கிடக்கிறது
உணவின் விலை வானத்தைத் தொட,
மனித உயிரின் விலை
பூமிக்குள் புதைந்தது
எழுந்து நடக்கமுடியாதபடி...
உடல் அதன் இயக்கம் உடைந்து
தன்னம்பிக்கை இழந்து தவிக்கிறது...
யாரைக் கேட்பது காப்பாற்றும் படி?
பயங்கரவாதி என
ஒரு போராளியின் பெயர்
ஆவணங்களில் பொறிக்கப்பட்டது,
அவள் இதயத்தில் அந்தப் பெயர்
காதலின் சாட்சியாக
இன்னும் துடிக்கிறது.

போர்க்களம் அவனைப் பலி எடுத்தது,
அவள் உயிரை எடுக்க மறந்தது.
இன்று தெருக்களில் நடக்கிறாள்
நிழலாக, ஆனால் உயிரோடு.
கணவன் உயிராய் நினைத்த உலகம்,
அவன் காப்பாற்ற நினைத்த
மனிதர்கள்
அவளை 'விபசாரி' என்று
அழைக்கின்றனர்

அவள் அழுகிறாள் சத்தமில்லாமல்,
ஏனெனில் கண்ணீருக்கு விலை
இல்லை.
பசியின் சத்தம் தான் அதிகம்,
ஆத்மாவின் குரல் யாருக்கும்
கேட்கவில்லை.
கணவன் உயிரோடு இருந்தால்,
சூரியன் சுட்டெரித்து இராது ...

எல்லாவற்றுக்கும் சாட்சியான
வானம் நோக்கிப் பார்க்கிறாள்
அது அமைதியாக இருக்கிறது
மண்ணோ காய்ந்து கிடக்கிறது.
அவளது கண்ணீரில் கலந்தது
தாய்மையும் துன்பமும்.
அவளது தவறல்ல
அவளது தள்ளப்பட்ட நிலைதான்.
போர் அவனைக் கொன்றது,
போராளிகளின் குடும்பங்களை
ஒதுக்கிய சமூகம்.....
எவருக்காக போராடினானோ அது
அவளை உயிரோடே சுட்டது.
நிழலாய் நடந்தாள் ....
அவள் பெயர் யாருக்கும் தெரியாது.

ஆனால் என் வலி,
ஒவ்வொரு சுவாசத்திலும்
நெருப்பாகத் தெரிகிறது.
அவள் கைகளில்...
தாய்மையின் மென்மை இருந்தது,
இன்று அது பணத்தின் வாசம்
பூசியது.
விருப்பமில்லாமல், வழியில்லாமல்
இருளின் தொழில் தலைவிதியானது.

"வா என்னும் போதெல்லாம்,
உள்ளம் அலறுகிறது,
உடல் அமைதியாக நிற்கிறது.
உயிர் அழுவதை யாரும்
கேட்கவில்லை,
கண்ணீர் விலை போட்டு
அளவிடப்படுகிறது.


ஒரு காலத்தில் காதலின் பெயரில்
மலர்ந்த அவள்,
இன்று பசியின் பெயரில் தளர்கிறாள்.
உடலுக்கு விலை, பசிக்குக் காசு....,
ஆன்மாவை நேசிக்காத இரவுகள்
முடியும் போதெல்லாம் மரணவலி...
போரின் கவிதை ஒன்று
விரும்பாத வாழ்வொன்றை
காலம் கட்டாயப்படுத்தியிருக்கிறது
இங்கு தற்கொலையும் கொலையும்
தண்டனைக்குரியதாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்

றெ.மலரிசை
தரம்10
மு/யோகபுரம் ம.வி.



பருஷியா,
தரம்- AL
யா/ வேம்படி
மகளிர் கல்லூரி

றெ. செரோமி
தரம் 5A
யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம் .




பா.லதுர்ஷன்
தரம்- 9A
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி



# கட்புலனாகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் அவ்வாறு செய்வது என்று சொன்னால் அநுர முப்படைகளின் தளபதியாக எந்தெந்தக் கட்டமைப்புகளுக்குத் தலைமை தாங்குகின்றாரோ அதே கட்டமைப்புகளுக்கு எதிராக அந்த நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டியிருக்கும். அப்படிப்பார்த்தால் தேசிய மக்கள் சக்தி வாக்களித்த மாற்றத்தை அதன் மெய்யான பொருளில் தமிழ் மக்களுக்குக் காட்டுவதற்குரிய ஒரு சோதனைக் களமாக அது அமையுமா?


அல்லது இது எதிர்க்கட்சிகளைத் தலையெடுக்க விடாமல் முடக்கும் அல்லது தற்காப்பு நிலைக்குத் தள்ளும் ஒரு நடவடிக்கையாக முடிந்துவிடுமா?

கடந்த சில மாதங்களாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற போதைப்பொருள் ஒழிப்புத்திட்டம், பாதாள உலகக் குழுக்களைக் கைது செய்யும் நடவடிக்கை போன்றன எதிர்க்கட்சிகளைப் பெருமளவுக்கு தற்காப்பு நிலைக்கு தள்ளிவிட்டுள்ளன. ஒருபுறம் அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி உட்பட முக்கியமான அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்கள் என்று உயர் பதவி நிலைகளில் இருந்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கிறது. இன்னொருபுறம் பாதாள உலகக் குற்றவாளிகள், போதைப்பொருள் குற்றவாளிகள் என்று பெருந்தொகையானவர்களைக் கைது செய்து வருகிறது.

பாதாள உலகம் எங்கேயோ ஓரிடத்தில் அரசியல்வாதிகளோடும் கட்சிகளோடும் தொடர்புற்றிருப்பதாகவே தெரிகிறது. எனவே இந்த நடவடிக்கைகள் யாவும் ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு கட்சிக்கு அல்லது அரசியல்வாதிக்கு எதிரானவைகளாகத்தான் தெரிகின்றன. இதன் மூலம் ஏனைய கட்சிகள் யாவும் எங்கேயோ ஓரிடத்தில் குற்றக் கும்பல்களோடு தொடர்புடையவை என்ற ஒரு தோற்றம் மிகவும் கச்சிதமாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. இது அதன் தர்க்கபூர்வ விளைவாக தேசிய மக்கள்சக்தி அரசாங்கமானது சுத்தமானது, ஆனால் அதற்கு எதிரான எதிர்க்கட்சிகள் பெரும்பாலானவை குற்றக் கும்பல்களோடு தொடர்புடையவை என்ற ஒரு அரசியல் தோற்றத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. இதனால் எதிர்க்கட்சிகள் பதற்றம் அடைகின்றன; பெருமளவுக்குத் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

இவ்வாறு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்ட எதிர்க்கட்சிகள் தவிர்க்க முடியாமல் ஒன்று சேர வேண்டிய ஒரு தேவை; நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. "கூட்டு எதிரணியினரின் நுகேகொடைக் கூட்டம் வெற்றியளிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். ஏனெனில், பொதுமக்களுக்கு பயனற்ற ஒன்றாக அது உள்ளது. மேற்படி கூட்டத்தை நடத்துவதால் பாதாள உலகக் கோஷ்டியையோ அல்லது போதைப்பொருள் வர்த்தகத்தையோ தடுக்க முடியாது. எனவே அது பொதுமக்களுக்கு பயன் அளிக்கும் ஒரு விடயமாக இருக்காது. என்று அமைச்சர் லால்காந்த கூறியிருப்பதும் அதைத்தான். எனவே அரசாங்கம் போதை விலையமைப்பையும் பாதாள உலகம் வலையமைப்பையும் முழுமையாக ஒடுக்குமோ இல்லையோ இப்போதைக்கு எதிர்க்கட்சிகளைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கின்றது. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் அரசியல் யதார்த்தம் அதுவல்ல. சுகததாஸ உள்ளரங்கில் போதை ஒழிப்புத் திட்டத்தை கட்புலனாகா அரங்கின்மூலம் கவர்ச்சியாகத் தொடக்கி வைப்பது வேறு. தமிழ்ப் பகுதிகளில் தமிழ் அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டுவதுபோல கட்டமைப்புசார் இன அழிப்பின் ஒரு பகுதியாகத் தொடரும் கட்புலனாகாப் போரை நிறுத்துவது வேறு. ஏனென்றால் இங்கு அநுர போர் புரிய வேண்டியது முப்படைகளின் தளபதியாகத் தான் தலைமைதாங்கும் கட்டமைப்புக்கும் எதிராகத்தான்.

# கரடியும் நரியும்



அமைதியான காட்டில், ஒரு பருமனும் பெருமையும் கொண்ட கரடியும் ஒரு நரியும் வாழ்ந்து வந்தன. ஒருநாள், கரடி காட்டில் சத்தமாகப் பெருமை பேசிக் கொண்டிருந்தது.

இந்தக் காட்டிலேயே நான் தான் மிகவும் கருணையுள்ளவன். சாதுவானவன். ஒரு மனிதன் இறந்திருந்தாலும் நான் அவனுக்கு ஒருபோதும் தீங்கு செய்யமாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருந்தது.

அருகில் இருந்த ஒரு மரத்தடியில் தூங்கிக்கொண்டிருந்த நரி, ஒரு கண்ணைத் திறந்து கரடி சொல்வதைக் கேட்டது.

கரடி அதன் மார்பைத் தட்டிக்கொண்டு, அமைதியான காடு முழுவதும் அதன் குரல் எதிரொலிக்கும் வகையில் பெருமை பேசிக்கொண்டிருந்தது.

மெதுவாக, நரி எழுந்து கரடியிடம் சென்றது.

"இறந்த ஒரு மனிதனுக்கு நீ தீங்கு செய்யமாட்டாய் என்று சொல்கிறாய், அதை நான் நம்புகிறேன். ஆனால், நீ உயிருடன் இருப்பவர்களுக்கும் தீங்கு செய்யாமல் இருந்தால், அது இன்னும் கருணையாக இருக்கும் என்று நீ நினைக்கவில்லையா?" என்று நரி கேட்டது.

இதனைக் கேட்ட கரடி வார்த்தை இல்லாமல் திக்குமுக்காடியது. வார்த்தைகளிலிருந்து மட்டும் கருணை காட்டுவதைவிட, செயலில் கருணை காட்டுவது எவ்வளவு முக்கியம் என்பதை நரியின் வார்த்தைகளிலிருந்து கரடி உணர்ந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org